Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 218
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 3 ஜ. ஆகி. 14 செவ்வாய்க்கிழமை [19-9-67]

## ஆசியாவில் இலங்கையின் சாதனை; 1966-ல இங்கு பிறப்பு குறைவு

கொழும்பு, திங்கள்

ஆசியாவிலேயே இலங்கையில் தான் சென்ற வருடத்தில் குழந்தைகள் குறைவாகப் பிறந்திருக்கின்றன.

முன்னைய வருடங்களில் ஜனனவிகிதம் இங்கும் அதிகரித்து வந்துள்ளது, ஆனால் 1965-ம் ஆண்டைவிட 1966-ம் ஆண்டில் ஏழுசதவிகிதம் ஜனனவிகிதம் குறைந்திருந்தது. இதற்கான காரணம் தெளிவாகத் தெரிவிக்கப் படவில்லையானாலும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமே குழந்தைகள் பிறப்பது குறைந்திருப்பதற்குக் காரணமாக இருக்கலாமென சுகாதார இலாகாவினர் கருதுகின்றனர். சென்ற வருடத்தில் ஜனனவிகிதம் குறைந்ததனால் சுகாதார அமைச்சர் மகிழ்ச்சியடைந்துள்ளார். குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்துவதன் மூலம் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாமென அமைச்சர்கருதுகிறார்.

# இந்திராவுக்கு கொழும்பில் மகத்தான அன்பு வரவேற்பு

## மோட்டார்காரை மக்கள் சூழ்ந்துகொண்ட காட்சி



கொழும்பு, திங்கள்

இந்திய நாட்டின் தலைவியும், ஐம்பது கோடி மக்களின் அன்னை போன்ற பெண்ணும், இந்தியாவின் பிரதம மந்திரியுமான திருமதி இந்திரா காந்தி இன்று நண்பகலுக்குச் சில நிமிஷங்கள் தாமதமாக இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கிய போது, அங்கு திரண்டுநின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்செய்து உற்சாகத்துடன் வரவேற்றனர்.

திருமதி இந்திரா காந்தியை ஏற்றிக்கொண்டுவந்த இந்திய விசேஷ விமானம் வானத்தில் கண்ணுக்குத் தென்பட்டதும் விமானநிலையத்தில் திரண்டிருந்த மக்கள் கரகோஷம் செய்யத்தொடங்கினர். விமானம் தரையிறங்கி விமானத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. திருமதி இந்திரா விமானத்திலிருந்து இறங்கினார். அங்கு திரண்டுநின்றவர்களைப் பார்த்துப் புன்சிரிப்புடன் இரு கரம் கூப்பி வணக்கம் செலுத்தினார். விமானத்தின் அருகே இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. வை. டி. கண்டேவியா, வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. வி. பீரிஸ் ஆகியோர் இந்தியப் பிரதமரை வரவேற்றனர். இதன் பின் இந்தியப் பிரதமரை வரவேற்பதற்காக அங்கு வந்திருந்த மந்திரிசபை அங்கத்தினர்கள், ஜனப் பிரதிநிதிகள் சபை சபாநாயகர், செனட் சபைத் தலைவர், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பிரமுகர்கள் திருமதி காந்திக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

இதன்பின் விமான நிலையத்தில் முப்படையினர் அளித்த அணிவகுப்பு மரியாதையை இந்தியப் பிரதமர் ஏற்றுக்கொண்டார். பொலிஸ் வாத்தியக்கோஷ்டியினர் இந்திய, இலங்கை தேசிய கீதங்களை இசைத்தனர்.

விமான நிலையத்திற்கு வெளியே திருமதி இந்திரா காந்தி வந்தபொழுது அவரை ஒருதடவை பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலில் விமான நிலையத்தில் திரண்டு நின்ற மக்கள் பொலிசாரின் கட்டுக்காவல்களையும் மீறி முண்டியடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் நின்ற இடத்தைச் சூழ்ந்துகொண்டனர். அவர் மோட்டார்காரில் ஏறியதும் அந்தக் காரை மக்கள் சூழ்ந்துகொண்டனர். பெரும் சிரமப்பட்டு பொலிசார் ஜனக்கூட்டத்தை அகற்றி திருமதி இந்திரா காந்தியின் கார் புறப்பட்டுச் செல்ல வழிவிட்டுக்கொடுத்தனர்.

இரத்மலானை விமானநிலையத்திலிருந்து அலரிமாளிகை வரை வீதிகளில் இந்திய, இலங்கை தேசியக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. தோரணங்களும் அலங்கார வளைவுகளும் இந்தியப் பிரதமருக்கு நல்வரவு கூறிக்கொண்டிருந்தன.

விமான நிலையத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் தமிழ்த் தலைவர்களும் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

## 8 வர்த்தகர்மீது வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதியில் உப உணவுப் பொருட்களில் கொள்ளை இலாபமடித்துக்கொண்டிருந்த வர்த்தகர்களை விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் கட்டுப்படுத்தியபோதிலும் இடத்துக்கிடம் சில வர்த்தகர்கள் விலைக்கட்டுப்பாட்டைமீறிக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

கடந்த இரு மாதங்களில் வடபகுதியில் உப உணவுப் பொருட்களின் கட்டுப்பாட்டை மீறிய எட்டுவியாபாரிகள் மீது யாழ்ப்பாணம் உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் வழக்குத்தொடர்ந்துள்ளனர்.

சமீபத்தில் வல்வெட்டித்துறையில் ரூ. 1-80 ஆக விற்கப்படவேண்டிய 1/2 இருத்தல் ஹோர்லிக்ஸ் டின்னை ரூ. 1-90 ஆக விற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட நித்தியகாடு என்னும் இடத்தைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் குற்றவாளியாகக் காணப்பட்டு500 ரூ. தண்டமும் 4 வாரச் சிறையும் விதிக்கப்பட்டது. [வி. நி]

வவனியாவில்

## 8000 விவசாயிகளுக்கு கடன் வசதி

வவனியா, திங்கள்

வவனியா மாவட்டத்திலுள்ள சுமார் 8000 விவசாயிகள் அவர்களுக்குத்தேவையான விதைநெல், பசளை, மற்றும் விவசாயத்துக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்காக கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு இதுவரை 4 கோடி ரூபாவரை கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## தேவை

கல்வனைஸ்ட் வாளித் தொழிற்சாலையில்
பயிற்சிபெற்று, வேலைசெய்ய
இளைஞர்கள் தேவை
தகரவேலை அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.
நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில்விண்ணப்பிக்கவும்.

எல்பிஹெம் ஹவுஸ்

மாவிட்டபுரம், —— தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

**இந்துசமய விருத்திச்சங்கம் முள்ளானை**

1965-66-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கு அச்சிடப்பட்டு வெளியாகியிருக்கின்றது. இக்கணக்கை அச்சிட்டு வெளியிடமுன் தனாதிகாரியாகிய என்னிடம் காட்டவுமில்லை, எனது சம்மதம் பெறவுமில்லை. இக்கணக்கில் பல பிழைகள் இருக்கின்றன. சரியான கணக்கு வெளிவரும்வரைக்கும் இதை ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்று பொதுமக்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

வ. கணபதிப்பிள்ளை,
தனாதிகாரி,
இந்துசமயவிருத்திச்சங்கம்,
முள்ளானை,
இளவாலை.
15-9-67. 250

## விளம்பரம்

1. இதன்கீழ்க் காணப்படும் வேலைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் ரூபா 25-00 கட்டியதன் பேரில் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் 30-9-67-ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

4. கேள்விப் பத்திரங்கள் தலைவர், கிராமச் சபை, இரணைதீவு என்ற விலாசத்துக்கும், உள்ளூராட்சி உதவி அதிபர், புதிய கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கும் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும்.

5. வேலை: சின்னத்தீவு ரோட்டுப்போடல்.

வேலையின் விபரங்கள் யாவும் மேற்படி கந்தோரிலும், உள்ளூராட்சி உதவி அதிபர் கந்தோரிலும் கேட்டறியலாம்.

ச. தோமாஸ்,
இரணைதீவு கிராமச்சபைத் தலைவர்.
253

## கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் [புரட்டாசி] 25-9-67ம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணிவரையும் வட்டுக்கோட்டை கிராமசபை அக்கிராசனரால் பதிவுசெய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடும் வேலைக்குச் சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 24-9-67-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் ரெண்டர் பணமாக ரூபா 25/-ம், ரெண்டர்பத்திரப் பணம் ரூபா 2/-ம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரிலும், யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கந்தோரிலும் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**வேலையின் விபரம்**

1. மொருப்புலம் வீதி அமைத்தல் வேலை.

தா. சிவகுருநாதன்
தலைவர்
கிராமசபை
வட்டுக்கோட்டை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
15-9-67. 254

## வியாபாரம்பெருக விளம்பாம் செய்க

## "பாரதிகண்ட சமுதாயம்"

ஊர்காவற்றுறை, திங்கள்

"பாரதிக்கு விழா எடுப்பதிலும், பாரதியின் கவிதைகளைப்படிப்பதிலும் முன்னிற்பவர்கள் பாரதியின் இலட்சியத்தை நடைமுறையில் காட்டுவதில் பின் நிற்கிறார்கள். பாரதி சாதி, மத பேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்தினார். தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என முழக்கம் செய்தார். இன்றைய நிலையில் பாரதியின் வழியைப்பின்பற்றி நமது அரிசிப்பஞ்சத்தையும், பொருளாதாரக் கஷ்டத்தையும் போக்க ஆவனசெய்யவேண்டும்" என சரவணை சனசமூகநிலையத்தினரால் சரவணை நாகேசுவரி வித்தியாசாலையில் நடத்தப் பெற்ற பெற்ற பாரதி விழாவில் உரை நிகழ்த்திய வழக்கறிஞர் திரு. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

வேலணை தபால் அதிபர் திரு. இ நாகநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. அடுத்து ஸ்கந்தவரோதய கல்லூரி தமிழ் விரிவுரையாளர் வித்துவான் சி. ஆறுமுகம் பேசுகையில் "நல்லதொரு சமுதாயத்தை அமைத்த பாரதியின் இலட்சியத்தை இளைஞர்கள் சாதனையில் காட்டவேண்டும் எல்லோரும் ஓர் குலம்; ஓர் இனம் என்ற பாரதியின் கொள்கைகளை நாம் மறக்கக் கூடாது" என்றார்.

இவ் விழாவில் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் உட்படவேறுசிலரும் உரை நிகழ்த்தினர். விசேட கதம்ப நிகழ்ச்சியாக திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தியின் 'நாட்டிப்பாடல்' இடம் பெற்றது. திரு. கே. கணேசலிங்கம் நன்றிகூறினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 19-9-67**

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை- கே. கே. நடராசா. 6-40 இஸ்லாமியநற்சிந்தனை — எம். ஏ.எஸ். முகமத், 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக் குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல்12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 குரல்வகை, 6-45 கிராமசஞ்சிகை— விவசாயச்செய்திகள்— விவசாய விஞவிடை, 7-15 கோர்ட்டு வாத்தியம், 7-45 யூனெஸ்கோ உரைச்சித்திரம், 8-0.0 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதசுரம்—எஸ்.சிதம்பரநாதன், 10-15 தேர்ந்த இசை.

## 'உதவுங்கள்'

சுழிபுரம், திங்கள்

வடபகுதியிலுள்ள புற்றுநோயாளருக்கு வேண்டிய உதவிகளைச்செய்வதற்கு ஒவ்வொருவரும்தம்மாலான உதவியைத் தாராளமாக உதவும் படி யாழ். மாவட்ட புற்றுநோயாளர் சங்கத்தினர் ஒரு சுற்றுநிருபம் மூலம் சகலரையும் வேண்டியுள்ளனர். கிராமசபைகள், தர்மஸ்தாபனங்கள், தனிப்பட்ட நிறுவனங்கள் [illegible] ஸ்தாபனங்களையும் வேண்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்

# நேரஅட்டவணையின்படி எந்தபஸ்ஸூம் ஓடுவதில்லை

## பஸ் பிரயாணிகள் சங்க செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

'இலங்கையின் எந்தப் பிராந்தியத்தையும்விட யாழ்ப்பாணப் பிராந்திய இ. போ. ச.வின் பஸ்சேவை கேவலமாகஇருக்கின்றதென்பதுண்மை ஒருமுறைதானும் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் துர்ப்பாக்கியத்துக்குள்ளான யாழ்ப்பாண மக்கள் இந்த உண்மையை நன்கு அறிவர்.

வீதியோரங்களில் பல்லாயிரக்கணக்கானோர் ஒற்றைக்காலில் பல மணி நேரம் கடுந்தவம் செய்யும் காட்சியை நித்தம் யாழ்ப்பாணத்தில் நாம் காணலாம். இக் காட்சியை எப்படி எமது வட பிராந்திய முகாமையாளர் மட்டும் பார்க்க மறுக்கிறாரோ தெரியவில்லை. நேர அட்டவணைப்படி எந்தப் பாதையிலும் எந்தப் பஸ்ஸூம் ஓடுவதில்லை என்று நாம் எடுத்துச்சொல்ல விரும்புகிறோம். அரை மணித்தியாலத்துக்கு ஒரு பஸ் என்ற நேர அட்டவணையிருந்தாலும் அந்தப் பாதையில் ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு பஸ் வந்தாலே பெருஞ் சாதனையாக இருக்கும் என காரைநகர் -சித்தங்கேணி பஸ் பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. தி.கதிரவேற்பிள்ளை அறிக்கையிற் கூறியுள்ளார்.

'வருகின்ற பஸ்ஸூம் 'ஓவலோட்'ஆக வருகின்றது. தப்பித்தவறி ஏறினாலும் அந்தரத்தில் பஸ்ஸில் தொங்க வேண்டியுள்ளது இந்தக் கஷ்டங்களையும் தாண்டினால் இடையில் பஸ் 'பிரேக்டவுன்' ஆகிவிடுகிறது. நிலைமை இவ்வாறிருக்க இ. போ. ச. வட பிராந்திய முகாமையாளரது 'இ. போ. ச. வடக்கில் முன்னேறுகிறது' என்ற அறிக்கை பிரயாணிகளின் வயிற்றெறிச்சலைக் கிண்டிவிடுவதாக இருக்கிறது' என்றும், முகாமையாளரின் இவ்வித அறிக்கை யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கு அளப்பரிய தீமையை ஏற்படுத்துவதாகவும், தமது பிரதேச பிரயாணிகளின் தேவைகளையறிந்து மேலிடத்துக்கு எடுத்துச்சொல்லி நியாயம் வழங்குவதற்குப் பதிலாக விஷயத்தை மூடி மறைப்பது வருந்தத்தக்கது என்றும். இனிமேலாவது வடபகுதி பஸ் சேவையில் நல்ல திட்டங்களை முகாமையாளர் மேற்கொள்ளவேண்டுமென்றும் பஸ் பிரயாணிகள் சங்கச் செயலாளர் தமது அறிக்கையில் மேலும் கேட்டுள்ளார். [நி]

# மொழிப்பிரச்னை பற்றிய முடிவு ஒரு முடிந்த முடிவாகும்

—பிரதமர் இந்திரா

புதுடில்லி, செப். 18

காங்கிரஸல்லாத ராஜ்யங்கள், மத்திய அரசாங்கத்துக்குப் போதிய ஒத்துழைப்பு அளித்து வருவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றுப் புதுடில்லியில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

மத்தியஅரசாங்கமும்காங்கிரஸல்லாதராஜ்யங்களுக்கு ஒத்துழைப்பு அளித்துவருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ராஜ்யங்களின் கோரிக்கைகள் நியாயமானவையாக இருப்பதாகவும், ஆனால் அவற்றின் தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்வதற்கு மத்தியஅரசாங்கத்திடம் போதிய நிதிவசதி இல்லையென்றும் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

### முடிந்த முடிவு

மொழிப் பிரச்னை பற்றிய முடிவு ஒரு முடிந்த முடிவாகிவிட்டதென்று பிரதமர் குறிப்பிட்டார். அதை எவ்விதம் அமுலாக்குவதென்பது பற்றித்தான் இனிமேல் தீர்மானிக்க வேண்டியுள்ளது. 'ஆனால், கத்தி முனையில் யாரையும் ஒரு மொழியைப் படிக்க வைக்க முடியாது' என்றார் திருமதி இந்திராகாந்தி.

நாட்டின் நலனுக்கு நிரந்தர இடையூறு விளைவிக்கும் வகையில் எந்த ஒரு ராஜ்யமும் நடந்துகொண்டால் மத்திய அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறாதென்றும் பிரதமர் இந்திரா வலியுறுத்தினார்.

## தந்திக்கம்பிகளுக்கு சேதம்

சுழிபுரம், திங்கள்

மூளாய், சித்தங்கேணி, வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய வீதிகளால் செல்லும் டபிள் டெக்கர்கள் தெருக்கரையோரமாகவுள்ள தந்தி, தொலைபேசிக் கம்பிகளுக்குச் சேதம் விளைவித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இரண்டு டபிள்டெக்டர்கள் விலத்தும்போதே கம்பிகள் அறுக்கப்பட்டு சேதம் ஏற்படுகின்றன. இதனால் வட்டுக் [illegible] தொடர்புகள் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது.

## கயரோக கொடித் தினம்

சுழிபுரம், திங்கள்

அகில இலங்கைத் தேசிய நிவாரண கயரோகச் சங்கத்தினர் அடுத்த மாதம் 2-ம் திகதியன்று கயரோக கொடித்தினம் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

வலிகாமம் மேற்குப் பிரிவு கயரோகச் சங்கத்தினர் சென்ற ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு அதிகம் கொடிகளை விற்பனை செய்ய சுகாதார பரிசோதகர்கள், மற்றும் சனசமூக நிலையங்கள், பொதுச் சங்கங்கள் ஆகியவற்றின் உதவியை நாடியுள்ளனர்.

## அநுராதபுர செய்திகள்

### சாரணர் விழா

அநுராத புரத்திலுள்ள ஹரிச்சந்திரமாவத்தை என்னும் இடத்தில் வடமத்திய மாகாணப் பாடசாலைச் சாரணர்களது விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ் விழாவில் மத்திய மகாவித்தியாலயமும் விவேகானந்தா தமிழ் மகாவித்தியாலயமும் பங்கு பற்றியுள்ளன.

### பெண் சாரணர்கள் பெரும் சேவை

அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்தின் சாரணர் இயக்கம் இப்பகுதியில் பெரும்சேவை செய்து வருகிறது. கல்லூரியுள் மட்டுமின்றி ஆஸ்பத்திரிக்கும் சென்று இப்பெண் சாரணர்கள் சேவை செய்து வருகிறார்கள். பொதுமக்கள் அவதியுறும்போதும் இந்த இயக்கத்தினர் அவர்களின் தேவையறிந்து சேவை செய்து வருவதால் பொதுமக்களின் நன் மதிப்பை இவர்கள் பெற்று வருகிறார்கள்.

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் பிரபலமான ஸ்ருடியோ ஒன்றுக்கு அனுபவமுள்ள மனேஜர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் 25-9-67 க்கு முன் விளம்பர இல. 2362 மே./பா. ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2362

**அச்சுக்கோர்ப்பவர்கள்**

ஐந்துவருடஅனுபவத்துடனுள்ள அச்சுக்கோர்பவர்கள் தேவை. தகுதிக்கேற்றபடி சம்பளம் வழங்கப்படும் தெரிவுக்கு முன்னர் நேர்முகபரீட்சைக்கு தோற்ற வேண்டும். விபரங்களுக்கு விளம்பர இல. 2369 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2369

**மெசின்மயின்டர்ஸ்**

மூன்றுவருட அனுபவத்துடனுள்ள மெசின்மயின்டர்ஸ் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு விளம்பர இல: 2370 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2370

### விற்பனைக்கு

காணி

சுண்டிக்குளியில் 7பரப்புக் காணி விற்பனைச்கு இருக்கிறது. விபரங்களுக்கு நம்பர் 74, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம். 2368

சுன்னாகம் பொலிஸ்நிலையத்திற்குமுன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குஇருக்கிறது. தேவையானோர் கீழ்க்காணும் வில்ாசத்திற்கு தொடர்புகொள்ளவும். சி. கனகலிங்கம், 30/7 தாமரக்கேணி ரோட், மட்டக்களப்பு. 2356

## தந்திக்கம்பி திருட்டு

சுழிபுரம், திங்கள்

பொன்னாலைப் பகுதியிலிருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை நோக்கிச் செல்லும் வீதியிலிருக்கும் ஏழு கம்பங்களுக்கிடையேயுள்ள தந்திக்கம்பிகள் திருடப்பட்டுவிட்டதாக அறியப்படுகிறது. இதனால் சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள தந்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தின் தொலைபேசித் தொடர்பும் தடைப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

சங்கானைப் பொலிசார் வடபகுதி தந்தி தொடர்பு அதிகாரி, தபால் அத்தியட்சர், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் களவுபோன தந்திக்கம்பங்கள் உள்ள இடத்தைப் பார்வையிட்டடுச்சென்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு அரபுநாடுகள் இணைந்தஓரே சோஷலிஸ நாட்டுக்கு யோசனை

## சிரியா அதிபர் அட்டாஸி வெளியிட்டார்

டமாஸ்கஸ், செப். 18

ஐக்கிய அரபுக் குடியரசு, அல்ஜீரியா, ஈராக் ஆகிய நாடுகள் சிரியாவுடன் சேர்ந்து, ஒரு சோஷலிஸ நாடாக இணையவேண்டுமென சிரியா ஜனாதிபதி டாக்டர் அட்டாஸி, நேற்று இங்கு ஒரு ரேடியோ, டெலிவிஷன் பேச்சில் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேலை இராணுவரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எதிர்க்க இத்தகைய இணைப்பு பெரிதும் உதவுமென அவர் கூறினார்.

சிரியாவில் பொதுப்படை திரட்டல் நடைபெறுமெனவும், இராணுவ அடிப்படையில் சிரியாவைப்பலப்படுத்த பொருளாதாரச்சிக்கன நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் எனவும் டாக்டர் அட்டாஸி மேலும் தெரிவித்தார்.

### கார்டூம் மாநாடுக்கு கண்டனம்

அண்மையில் கார்டூமில் நடைபெற்ற அரபு உச்சி மாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களைச் சிரியா அதிபர் கண்டித்தார். கடந்த ஜூன் மாதம் இஸ்ரேலுடன் நடைபெற்ற போரில், அரபு நாடுகளுக்கு எதிரானகொள்கையை அனுஷ்டித்த மேற்கத்தைய நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகியவற்றுக்கு எண்ணெய் ஏற்றுமதி மீது விதித்த தடையை மீண்டும் புதுப்பிக்கும்படி டாக்டர் அட்டாஸி, மற்றைய அரபு நாடுகளைக் கேட்டுக்கொண்டார்.

எந்தவொரு அரபு உச்சி மாநாட்டிலும் சிரியாகலந்து கொள்ளாது எனத் தெரிவித்த அட்டாஸி, அரபுநாடுகளின் பிரச்னைகளைத் தீர்க்க மாநாடுகளால் முடியாதென்றும், அதற்கு ஒரே வழி, ஆயுதந்தாங்கிய போராட்டமேயெனவும் கூறினார்.

### தொடர்பு வைக்காது

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகியநாடுகளுடன் சிரியா, ராஜிய அல்லது பொருளாதாரத் தொடர்புகள் எதையும் வைத்துக் கொள்ளாது என டாக்டர் அட்டாஸி வலியுறுத்தினார்.

கார்டூம் மாநாட்டில், சூயஸ் பிரச்னை சம்பந்தமாக ஐ. அ. கு. வுக்கும் சவுதி அரேபியாவுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டை டாக்டர் அட்டாஸி, திருப்திகரமற்றதென வர்ணித்தார்.

## சமஷ்டிஅரசாங்கம் அமைக்க முயற்சி

ஏடன், செப். 18

தென் அரபிய சமஷ்டிக்கு பிரிட்டன் சுதந்திரமளித்ததும், அங்கு ஒரு தேசிய அரசாங்கம் அமைக்க, புளொஸியுடன் இணைவதற்குத் தான் தயாராக விருப்பதாகத் தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த இணைப்பு, இரு கட்சிகளுக்கும் சமஷ்டியில் உள்ள பரஸ்பர பலத்தின் அடிப்படையிலேயே அமையவேண்டும் என்றும் தேசிய விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தென் அரபிய சமஷ்டியில் தேசிய விடுதலை முன்னணியே அதிகமான இடங்களில் சக்தி வாய்ந்து விளங்குகிறது.

---

உடுப்பிட்டி, திங்கள்

வல்வைப்பட்டின சபையில் விகிதராகக்கடமையாற்றிய திரு. முத்துக்குமாரசாமி மானிப்பாய் பட்டின சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை முன்னிட்டு அவரது சக ஊழியர் தேநீர் விருந்துபசாரம் அளித்துப் பிரியாவிடை வழங்கினர்.

## 'என் வாழ்வு எனக்காக அல்ல மக்களுக்காக' என்கிறார் அண்ணா

### பிறந்த தின வாழ்த்துக்கு நன்றி

சென்னை, செப். 18



தம்முடைய 59-வது பிறந்த தினத்தையொட்டி நேரில் வாழ்த்துத் தெரிவித்தவர்களுக்கும், செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தம்முடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"பிறந்த நாள் வாழ்த்தளித்த அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் பிறந்த நாளைத் தமிழகத்தில் விழாவாக நடத்தியது எனக்குப் பெருமையை அல்ல, பொறுப்புணர்ச்சியைத்தான் அதிக அளவுக்குத் தந்திருக்கிறது.

என் வாழ்வு எனக்காக அல்ல - மக்களுக்காக - என்பதை நினைவுபடுத்துவதே அந்த விழா."

இவ்வாறு அந்த அறிக்கையில், திரு. அண்ணாதுரை குறிப்பிட்டுள்ளார்.

### என் குறிக்கோள்

"திட்டமிட்ட முன்னேற்றம், கசப்புணர்ச்சி அற்ற சமூக வாழ்வு, இவை என் குறிக்கோள்-பல ஆண்டுகளாக.

தமிழக அரசை நடத்திச் செல்லப் பணிக்கப்பட்டவன் என்ற முறையில் இந்தக் குறிக்கோள் நிறைவேறப் பாடுபடுவதே என் வேலைத் திட்டம்" என்று திரு. அண்ணாதுரை மேலும் அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.

# உதைபந்தாட்டத்தின் போது மைதானத்தில் கலகம்

## மத்திய துருக்கியில் சம்பவம்

### 39 பேர் மாண்டனர்: 600 பேர் காயம்

இஸ்தான்புல், செப் 18

மத்திய துருக்கியில் கெய்சிரி என்னுமிடத்தில் ஒரு உதைபந்தாட்டப் போட்டியின்போது ஏற்பட்ட கலகத்தில் 39 பேர் இறந்தனர். 600க்கு அதிகமானோர் காயமுற்றனர்.

உள்ளூர்க் கோஷ்டிக்கும் வெளியூர்க் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற இப்போட்டியில், உள்ளூர் கோஷ்டி ஒரு கோல் போட்டிருந்தது. அதன்பின்னர், விளையாட்டு வீரருக்கும் பார்வையாளருக்குமிடையே ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டுக் கைகலப்பாக மாறியது.

சிறிது நேரத்தில் விளையாட்டு மைதானம் அல்லோலகல்லோலப்பட்டது. இரு கோஷ்டிகளின் ஆதரவாளர்களும் ஒருவரோடொருவர் கடுமையாகச் சண்டையிட்டனர். இச்சண்டையில் கைத்துப்பாக்கிகள், கத்திகள், போத்தல்கள் ஆகியன தாராளமாகப் பாவிக்கப்பட்டன. பார்வையாளர் கட்டிடத்தின் பால்னியிலிருந்து ஆட்கள் கீழே தள்ளிவிழுத்தப்பட்டனர். அங்குமிங்குமாக ஓடிய சனக்கும்பலின் கீழே அகப்பட்டுப் பலர் மாண்டனர்.

### துருப்புகள் வந்தன

கலகத்தை முறியடிக்க, துருப்புகள் மைதானத்துக்கு அழைக்கப்பட்டன. மைதானத்தில் தொடங்கிய சண்டை, பின்னர் வெளியே தெருக்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

ரஷ்யாவுக்குவிஜயம் செய்யப்புறப்படவிருந்த துருக்கி ஜனாதிபதி, தமது பிரயாணத்தை 24 மணி நேரம் பின்போட்டார். மந்திரி சபையின் அவசரக் கூட்டமொன்றை அழைத்து நிலைமையை விவாதித்தார்.

# லண்டனிலிருந்து இளம்சோவியத் விஞ்ஞானியைக் கடத்த முயற்சி

## பிரிட்டனும் ரஷ்யாவும் ஆட்சேபனைக் கடிதங்கள் பரிமாறின

லண்டன், செப். 18

ஓர் இளம் சோவியத் விஞ்ஞானியை லண்டனிலிருந்து ரஷ்யா கடத்த நடைபெற்ற முயற்சி சம்பந்தமாக பிரிட்டனும் ரஷ்யாவும் கடுமையான ஆட்சேபனைக் கடிதங்களைப் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொண்டுள்ளன.

இங்கிலாந்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த டாக்டர் விலாடிமோர் காச்சின்கோ என்பவரே இந்த இளம் விஞ்ஞானியாவார்.

### விமான நிலைய சம்பவம்

கடந்த சனிக்கிழமையன்று, லண்டன் விமான நிலையத்தில், ரஷ்யா புறப்பட்டுச் செல்ல நின்ற ஒரு சோவியத் விமானத்தினுள் இவரைக் கொண்டு செல்ல சோவியத் தூதரக அதிகாரிகள் முயன்றபோது, லண்டன் பொலிசார் அவர்களுடன் முட்டிமோதிக்கொண்டு அந்த இளம் டாக்டரை அவர்கள் பிடியிலிருந்து மீட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. அமைதி மருந்து கொடுக்கப்பட்ட நிலையில் டாக்டர் இருக்கக்காணப்பட்டாரென்றும் சொல்லப்படுகிறது.

### ரஷ்யாவின் மறுப்பு

இந்தச் செய்தியைச் சோவியத்ரஷ்யா மறுத்துள்ளது. சட்டத்துக்கு விரோதமாக டாக்டர் காச்சின்கோவை பிரிட்டிஷ் அரசாங்கம் மறித்து வைத்துள்ளதாக அது குற்றஞ்சாட்டியுள்ளது.

டாக்டர் காச்சின்கோ, தமது விருப்பத்தின் பேரிலேயே சோவியத் தூதரகத்துக்கு வந்ததாகவும், அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே அவருக்கு அமைதி மருந்து அளிக்கப்பட்டதாகவும், அவர் ரஷ்யா செல்ல இணக்கம் தெரிவித்திருந்ததாகவும் சோவியத் அறிக்கையொன்று அறிவித்துள்ளது.

## 4 பேர் மரணம்

அலஹபாத், செப். 18

அலஹபாத்தில் ஒரு மாடி வீட்டில் பால்கனி இடிந்து விழுந்ததன் விளைவாக 4 பேர் மாண்டனர். 20-க்கு மதிகமான பேர் காயமடைந்தனர். அவர்களில் 10 பேருக்குப் பலத்த காயம்.

# மந்திரிக்கு எதிராக தீர்ப்பு

லண்டன், செப்டம்பர் 18

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய கல்வித்திட்டத்துக்கு எதிராக லண்டன் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கல்வி மந்திரி செலவுத் தொகையைக் கட்டவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

போதிய அவகாசமளிக்காமல் புதிய கல்வித்திட்டம் புகுத்தப்பட்டிருக்கிறதென்றும், இதனால் விவேகமான மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் நுழைய முடியாமல் போய்விடுமென்றும், கல்விமந்திரியின் இந்த நடவடிக்கை நியாயமற்றதென்றும் தீர்ப்பின்போது கூறப்பட்டது.

## ரஷ்யாவிலிருந்து திரும்பினார்

புதுடில்லி, செப். 18

ரஷ்யாவுக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவரண்சிங், தாயகம் திரும்பியுள்ளார்.

ரஷ்யாவில், அவர் சோவியத் பிரதமர், வெளியுறவு மந்திரி, பாதுகாப்பு மந்திரி ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார்.

**மக்களிடையே**

# காம உணர்ச்சியைத் தூண்டுகிறது சினிமா

## இப்படிக் கூறுகிறார் கவர்னர் உஜ்ஜல்சிங்

சென்னை, செப். 18

சினிமா, மக்களிடையே காமஉணர்ச்சியைத் தூண்டுகின்றது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்துக்கு இது உதவிகரமாக இல்லை என்று தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் கண்டனம் தெரிவித்தார்.

இரு தினங்களுக்கு முன், சென்னை வைத்தியக் கல்லூரி மைதானத்தில் குடும்பக் கட்டுப்பாடு பட்சத்தை கவர்னர் துவக்கிவைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

### ஆபாசம் அதிகம்

அவர் மேலும் பேசுகையில் "75 சதவிகித மக்கள் கிராமப் பகுதிகளில் வசிக்கின்றனர். அவர்களுக்கு நல்ல பொழுதுபோக்கு எதுவும் இல்லை. நகரப்பகுதிகளிலும், சிறு பட்டினங்களிலும் பெரும்பாலான மக்களுக்குப் பொழுதுபோக்கு சினிமாவே. ஆனால் நவீன சினிமாவில் ஆபாசக்காட்சிகள்தான் அதிகம். பொழுது போக்கு அம்சம் எதுவும் இல்லை. மக்களிடையே காம உணர்ச்சியைத் தூண்டுகின்றது" என்று கூறினார்.

## பரிசு பெற்றனர்

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் தெற்கு ஆதவன் இளைஞர் மன்றத்தினர் பாரதிநினைவு தினத்தையொட்டி வடமாகாண இளைஞர்களுக்கிடையே நடாத்திய கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் வருமாறு:

(கட்டுரைப் போட்டி) எஸ். விநாயகமூர்த்தி, ஜே. ஜெயக்குமார், இ. இராஜேந்திரம்.

(கவிதைப் போட்டி] சைவப்புலவர் "கருணையூர் யோகன்" [செ. யோகராசா].

இவர்களுக்குரிய பரிசுகளை பாரதிவிழாவிற்குத் தலைமை வகித்த ஆசிரியர் திரு. சபா. செல்வநாயகம் வழங்கினார்.

## சர்வதேச சட்டமன்றத்தில் இலங்கைப் பிரதிநிதி

உடுப்பிட்டி, திங்.

நவிண்டிலைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ஆசைப்பிள்ளை தவத்துரை வரும் 30-ம் திகதி காலை பீ. ஓ. ஏ. ஸி. விமானம் மூலம் லண்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேசசட்ட மன்றத்தில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து உரை நிகழ்த்துவதற்காகச் செல்விருக்கிறார். இவர் கனடா, ஜேர்மனி இத்தாலி ஆகிய இடங்களுக்கும் சென்று சட்டத்துறை பற்றி ஆராய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

பிறர் உங்களை புண்படுத்தும் வகையில் பேசினுலோ அல்லது அவமானப்படுத்தினுலோ அதற்காக வருந்தாதீர்கள். அவற்றை உங்கள் உடலில் அணியும் அணிகலன்களாக எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள்.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஹுப் புரட்டாதி 3உ (19-9-67)

## அரசாங்க அதிபர்கள் பணி

அரசாங்க அதிபர்களின் மகாநாடு கொழும்பில் நடைபெற்று முடிவடைந்திருக்கிறது. உணவு உற்பத்தியை அதிகரிக்க அரசாங்க அதிபர்கள் இதுவரை எடுத்த முயற்சிகளை பிரதமரும் உணவு விவசாய அமைச்சரும் மற்றையோரும் பாராட்டியிருப்பதோடு இனி அவர்கள் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றனர். உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் மட்டுமல்ல நாட்டின் அபிவிருத்தியும் மாகாண அதிபர்களிடமே பெரிதும் தங்கியிருக்கிறது.

கிராமங்கள், பட்டினங்கள், நகரங்களின் அபிவிருத்தியில்தான் நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது. விவசாயமும் சிறு கைத்தொழில்களும் கிராமங்களிலும் பட்டினங்களிலும் தான் உற்பத்தியாகின்றன.

கிராமங்களிலும் பட்டினங்களிலுமுள்ள மக்களின் நிலைமையையும் கஷ்டநஷ்டங்களையும் அரசாங்க அதிபர்கள்தான் நன்கு அறிந்து கொள்ள முடியும். அரசாங்க அதிபர்கள் முன்னர் மக்களின் குறைநிறைகளைத் தெரிந்து கொள்ளாமலிருந்திருக்கலாம். அதன் விளைவுதான் நமது நாடு இன்னும் முன்னேற முடியாதிருப்பதற்குக் காரணம்.

இன்று நிலைமை மாறிவிட்டது. பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் குறைகளையும் கஷ்டங்களையும் அறிந்து அவற்றை நீக்குவதற்கும் அவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்க வேண்டிய பொறுப்பும், சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டிய கடமையும் அரசாங்க அதிபர்களைச் சார்ந்துள்ளது. அரசாங்க அதிபர்கள் தங்கள் கடமையை உணர்ந்து செவ்வனே செய்யவும் மக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாட்டின் அபிவிருத்தி முயற்சிக்குப் பெற்றுக் கொடுக்கவும் கொழும்பில் நடந்த மகாநாடு உதவுமென்று நம்பலாம்.

## பயத்தை நீக்க

இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு ஆபத்து ஏற்படக்கூடுமென்று இங்கு சிலர் பயப்படுவதைப் பற்றி ஒரு பத்திரிகைக்காரர், பிரதமர் இந்திராவைக் கேட்டபோது, அவர் சிரித்துக்கொண்டு "ஒரு பெரிய நாட்டுக்கு இவ்வித பிரச்சனை ஏற்படுவது சகஜமே. நல்லெண்ணம், நட்பு, அமைதி இவையே எங்களது கொள்கையாகும்" என்ருர். இதைக் காட்ட இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் பெரிய நாடான இந்தியாவுக்கு உண்டு. இந்திய இன்சூரன்ஸ் கம்பெனிகளில் முன்னர் இன்ஷியூர் செய்த இலங்கை பாலிஸிதாரர்கள், இந்திய ரூபாய் மதிப்பு திடீரென குறைக்கப்பட்டதால் பெரும் நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளார்கள். கட்டின பணம் கூட பெற முடியாதபடி உள்ளது. வயோதிபத்தில் தங்களுக்கு உயிர்க்கஞ்சி ஊற்றுமென்று நம்பிக்கட்டிய பணத்தில் பெரும் பகுதியை, தாங்கள் ஏவ்வித தவறும் செய்யாதிருக்கையில் இழக்கநேரிட்டிருப்பது நியாயம் என்று யாரும் கூறமுடியாது. குறுகிய சட்டவாதப்படி இது சரியாக இருக்கலாம். ஆனால் மனிதாபிமானத்தையும் இரு தேச நல்லுறவையும் கருதுவதாயின் இம்மக்களுக்கு வீண் நஷ்டமேற்படாமல் செய்ய வேண்டியது இந்திய அரசாங்கத்தின் கடமை. பெரிய நாட்டுக்கு பெரிய உள்ளம்வேண்டும். அதன் மூலம் சிறிய நாடுகளின் பயத்தைப் போக்கி, நம்பிக்கையையும், அபிமானத்தையும் பெற முடிவதாக இருக்கும்.

# இராமநாதன் பல்கலைக்கழகம் - தமி[ழ்]
# தலைவர்கள் ஒன்றுபட்டுப் பெற வேண்[டு]

"பல்வேறு பிரச்சனைகளிலும் தமிழ்த் தலைவர்கள் பிரிந்து நின்ருலும் போதனை மொழி விஷயத்தில் ... மைக் குரல் எழுப்[பியதால்] தான் இன்று தமிழ்ப்பிள்ளைகள் தாய்மொழி மூலம் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைக்கவிருக்கிறது. இதே போன்று பிரதான கோரிக்கைகளில் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றிஞல்தான் முக்கியமான பிரச்னைகட்கு இலகுவான முறையில் தீர்வுகா[ண முடியும்] என்று அமைச்சர் [திரு. மு. திருச்]செல்வம் கரவெட்டியில் சொற்பொழிவு ஆற்றியதாக 'ஈழநாடு' 15-9-67 இதழில் தரப்பட்டிருக்கின்றது. அமைச்சர் கூறியவை பொன்மொழிகள்.

சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும் ஐந்து ஆண்டு காலமாகிய பூரண ஆயுளை எய்தவில்லை. யூ. என். பி.யின் ஆதிக்கத்தில் இயங்கும் தற்போதைய அரசாங்கத்தின் அரைவாசி ஆயுள் முடிவெய்திவிட்டது. இப்பாராளுமன்றம் முடிவெய்திய பின்னர் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் தமிழரின் ஆதரவில்தான் இயங்குகின்றதென்ற நிலைமை ஏற்படுவது சந்தேகம். காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள் என்ற பழமொழி தமிழ் இனத்தின் கூர்ந்த மதிக்கு எடுத்துக் காட்டு.

வித்தியாலங்கார வித்தியோதய பல்கலைக்கழகங்களை நிறுவியபொழுது அத்தகைய கலாச்சார அடிப்படையான பல்கலைக்கழகம் ஒன்றை இந்து மதத்தினரின் நன்மைக்கும் வேறென்றை இஸ்லாமியரின் நயத்திற்குமாக நிறுவத் தான் சம்மதம் என்று காலஞ்சென்ற பண்டாரநாயகா கூறியதன்பேரிலேயே காலஞ்சென்ற முதலை உறுப்பினரான நடேசன் இராமநாதன் பல்கலைக்கழகம் என்று ஒரு நிறுவனத்தை உருவாக்கப் பிரயத்தனப்பட்டார். அவரின் பிரயத்தனத்தின் பயனுகச் சிறிமா அம்மையாரின் ஆட்சிகாலத்திலேயே இராமநாதன் பல்கலைக்கழகம் என நாமமிட்டு அடையாள மான்யம் ஒன்று வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அந்த அடையாள மான்யம் வருடாருவடம் ஒதுக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறு தொடர்ந்து அடையாள மானியத்தை ஒதுக்குவதால் யூ. என். பீயும் கொள்கையளவில் இராமநாதன் பல்கலைக்கழகத்தை நி[று]வச் சம்மதம் என்பது பெறப்படும். சிங்கள மக்களிடையே தமிழர்க்கு விரோதமாக இனத்துவேஷத்தைக் கிளப்புபவர்களும் இராமநாதன் பல்கலைக் கழகத்திற்கு மாருகப் பிரசாரம்செய்ய முன்வரமாட்டார். ஏனெனில் காலஞ்சென்ற பண்டாரநாயகாவும், திருமதி பண்டாரநாயகாவும் அதை ஆதரித்திருக்கின்றனர். மேலும் இராமநாதனின் நாமத்திற்கு அஞ்சலிசெய்யும் வகையாக நிறுவப்படும் ஒரு பல்கலைக்கழகத்தை எதிர்த்துச் சிங்கள மக்களிடையேயும் பிரசாரம்செய்வது பயன்தராது. எனவே தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றிஞல் இராமநாதன் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது இலகுவில் நடைபெறக்கூடிய ஒரு விடயம்.

ஆனல் திருக்கோணமலையில் பரிபூரண தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற கோரிக்கை, தமிழர்க்குத் தனி நாடு என்ற அடிப்படையில்லாது கனவிலும் எய்த முடியாத ஒரு குறிக்கோள். தமிழ்மொழிமூலம் போதனை அளிக்கும் ஒரு பரிபூரண பல்கலைக்கழகம் என்ற குறிக்கோளே சிங்கள மக்களிடையே பெரும் துவேஷத்தைக் கிளப்பக்கூடியது. அதுவும் திருக்கோணமலையில் என்ருல் சொல்லவும் வேண்டுமா? அத்தகைய ஒரு விடயத்தை அரசாங்கம் சிந்திக்கிறது என்றவுடனேயே பெரும் ஆர்ப்பாட்டம் நடக்கும். மேலும் அப்பல்கலைக்கழகத்தின் பிரிவுகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னுர், வவுனியா என்ற இடங்களில் நிறுவப்படுவது என்பது கார்த்திகைப் பிறை ஆகாயத்தாமரை என்ற ரகத்தைச் சேர்ந்தது.

இலங்கையிலே பூரணத்துவம் பொருந்திய பல்கலைக்கழகம் ஒன்று உண்டென்ருல் அது பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகம் என்றே கூறவேண்டும். அப்பல்கலைக்கழகத்திலே சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள்மூலமும் போதனை அளிக்கப்படுகிறது. சிங்கள மொழி மூலம் போதனை அளிக்கப்படும் வித்தியோதய வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்கள் பூரணத்துவமானவை என்று கூற முடியாது. அங்கு அநேக முக்கிய துறைகளில் போதனை அளிக்கப்படவில்லை. புத்த மத கலாச்சாரமும் தொடர்பாய இதர கலைத்துறைகளுமே அங்கு பெரும்பாலும் போதிக்கப்படுகின்றன. சமீபத்தில் சிறு அளவில் விஞ்ஞான போதனைக்கு வகை செய்திருக்கின்றனர். இந்த நிலையில் தமிழ் மொழிமூலம் மாத்திரமே போதனை அளிக்கும் ஒரு பரிபூரண பல்கலைக்கழகம் நிறுவுவதென்ருல் சிங்களவர்களுக்குக் கிடையாத ஒரு வாய்ப்பைத் தமிழர்களுக்குக் கொடுப்பதாக வாதிக்கலாம். நீதிமன்றத்தில் சிங்களவர்களுக்கு இல்லாத வாய்ப்பைத் தமிழர்களுக்குக் கொடுப்பதாக அரசமைப்புச்சட்டத்தின் 29-வது பிரிவின் கீழ் அரசாங்கத்துக்கு மாருக வழக்கு வைக்க முடியும். இவ்வளவு விந்தையான நிலைமையைச் சிருஷ்டிக்கக் கூடிய வாய்ப்பு ஒன்றை எந்த இலங்கை அரசாங்கமும் தமிழர்களுக்குக் கொடுக்க முன்வருமா? எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியும் அத்தகைய வெற்றியைப் பெறமுடியுமா?

மேலத்தேசங்களில் புகழ்பெற்ற அநேக பல்கலைக்கழகங்கள் ஆரம்பத்தில் மத கலாச்சார போதனையையே

— சோ. வன்னியசிங்கம் —

மிகமுக்கியத்துவமான துறையாகக் கொண்டிருந்தன. ஆனல் காலகெதியில பல்வேறு துறைகளிலும்போதனு பீடங்கள் அமைக்கப்பெற்று உயரிய கல்வி நிலையமாகத் திகழ்கின்றன. ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம் இன்றைக்கும் கிறிஸ்தவ தரும போதனைக்கும் ஆராய்ச்சிக்கும் மிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. வித்தியோதயா வித்தியாலங்கார பல்கலைக் கழகங்கள் இன்று விஞ்ஞான போதனு பீடம் அமைக்கவில்லையா? ஒரு பல்கலைக் கழகத்தின் விஸ்திரணம் ஆரம்பத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் போதனைகளால் கட்டுண்டிருக்கமுடியாது காலப்போக்கில் அப்பல்கலைக் கழகத்தைப் பரிபாலிக்கும் சூழலே அதன் வளர்ச்சியையும் விஸ்திரணத்தையும் நிர்ணயிக்கும். இலங்கை வாழ் தமிழினத்திடையே உயர்தரக் கல்விக்குத் தராதரமுடைய மாணவரின் தொகைக்குக் குறைவுமில்லை போதனையைச் செய்யக்கூடிய விரிவுரையாளர் பேராசிரியர்களின் எண்ணிக்கைக்குக் குறைவுமில்லை. எனவே கேள்விகிடைப்புச் சக்திகளின் உந்தலினுல் இராமநாதன் பல்கலைக் கழகம் இலங்கையில் முதல்தரமான அந்தஸ்தைப்பெறும் என்பதற்கு எதுவித ஐயமுமிருக்கத்தேவையில்லை. 'பல்கலைக் கழகம்' என்ற சட்டரீதியான அந்தஸ்தைப் பெற்ருல் காலகெதியில் வெவ்வேறு கல்வித்துறைகளையும் நிறுவிக்கொள்வது சுலபம். பல்-கலை-கழகம் என்ற பதத்தின் அர்த்தத்தையே நாம் சிந்திக்கவேண்டாமா?

எனவே தமிழ்த்தலைவர்கள் ஒன்றுபட்டு இராமநாதன் பல்கலைக் கழகத்தை உடனடியாக நிறு[வ] வேண்டுமென்ற [கோரிக்]கையை ஆணித்[தரமாக] வற்புறுத்தி தமிழ்[...] தின் விமோசனத்திற்[கு அடி]ப்படையான இ[...] னத்தை [...] குச் செயலாற்ற மு[ன்வரு]தல்வேண்டும்.

### இன்றைய பலன்

19-9-67
செவ்வாய்க்கிழமை
(புரட்டாதி மாதம் 3உ)

நட்சத்திரம்- உத்தரட்டாதி.
திதி- பிரதமை இரவு 12-20 வரை மேல் துதியை.
சுபநேரம்- 10-33—12-03.
ராகுகாலம்- 3-03—4-33.

மேஷம்- வாக்குச்சித்தி, நற்பெயர் கேட்டல்.
ரிஷபம்- குமைச்சல் அதிகம், குறைவுப்பீதி.
மிதுனம்- வாகன சுகம், வரவுமுண்டு.
கடகம்- ஜெயமுண்டு பயமில்லை மனமே!
சிம்மம்- எதிரியால் துன்பம், இடர் உண்டு.
கன்னி- வாழ்க்கை நலன், வழியும் பிறக்கும்.
துலாம்- ஆயுதபயம், அவதானம் வேண்டும்.
விருச்சிகம்- குருபக்தி, குடும்பத்தில் அமைதி.
தனுசு- தொழில் சமவிருத்தி, தொல்லையுமுண்டு.
மகரம்-திருவிளக்கேற்று, இந்தநாள் திருநாள்.
கும்பம்- சிந்தனையின் தாக்குதல், சீற்றமிகுதி.
மீனம்- இதயத்தில்இடி, இரும்பு மனம் வேண்டும்.

—சோதிடக் கலாநிதி—
[...]

### மாணவருக்[கு] பாணில்லை

சுழிபுரம், [...]
சுழிபுரம், தொ[...] மூளாய் கிராம மு[ன்னேற்]றச் சமாஜ கூட்டுறவு [...] போறணையால் பாண் [...] றுக்கொள்ளும் அனேக [...] சாலைகளுக்கு பாண் [கிடைக்]காமல் இருப்பதால் [...] வர்கள் பட்டினியுட[ன்] செல்லநேரிட்டதாகத் [தெரிய வரு]கிறது. பாண் தயாரிப்[பதற்கு] அரசாங்கம்மாவை வி[நியோ]கிக்காததால் பாண் செ[ய்ய] முடியவில்லை என அ[றிவிக்]கப்பட்டுள்ளது. [...] கொடுக்கப்படவில்லை [...] பதை திருவடிநிலை [...] கலவன் படசாலை [...] ஆசிரி[யர்] திரு. எ[...] பரப்பிள்ளை வடப[...] அதிபருக்கு அறிவித்[துள்ள]தாகத்தெரிகிறது.

### சைவ மகாநா[டு]

கைதடி, [...]
கைதடி இந்து வ[...] சங்கத்தின் 4-வது மாநாடு இம்மாதம் 25-ம் 26-ம் திகதிகளி[ல்] பிரார்த்தனை மண்டப[த்]திலே நடைபெறும். [...] சைவ மாநாடு, சைவ [...]கிய மாநாடு, சைவ [இளை]ஞர் மாநாடு, சைவ [...]யர் மாநாடு எனப் [...] அடிப்படையில் [...] பெறும்.

# உணவு உற்பத்தி இயக்கத்[தில்]
# பத்திரிகைகளின் பணி !

## ராஜாங்க அமைச்சின் நிரந்தரக்காரியத[ரிசி]

"உணவு உற்பத்தி சம்பந்தமாக தேசிய பத்திரிகைகள் ஆற்றிய பணி தனித்தன்மை வாய்ந்ததாகும். அத்துடன் பத்திரிகையின் தொண்டு சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய தொன்ருகும்" இவ்வாறு ராஜாங்க அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஆனந்தடிஅல்விஸ் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் உணவு உற்பத்தி சம்பந்தமாக பத்திரிகைகளுக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குமிடையில் இருக்கவேண்டிய நல்லுறவு பற்றிக்குறிப்பிடுகையில் குறிப்பிட்டார்.

திரு. அல்விஸ் மேலும் குறிப்பிட்டதாவது:-

அரசாங்க உத்தியோகத்தர்கள் வகிக்கும் பதவியின் காரணமாகவும் அவர்களின் கடமை காரணமாகவும் பல சர்ச்சைகளுக்காளாகின்றனர். பத்திரிகைகள் செய்திகளை உண்மைக்கு மாருகவும் திரித்தும் பிரசுரிக்கின்றன என அரசாங்க உத்தியோகத்தர்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒரு தனித்துவம் உண்டு. நேற்று நடந்த சம்பவமொன்று அவர்களுக்குசரித்திரமாகவும் இன்றுநடக்கும் சம்பவம் அவர்களுக்கு செய்[தியா]கவும் அமைகின்றது. அரசாங்க உத்தியோகத்தர்கள் மனத்தில் பதிய வைத்துள்ள செய்திகள் சம்பந்தமான கருத்துக்களை அநேகமாகபத்திரிகையாளர்கள் பகிர்ந்து கொள்வதில்லை.

செய்திகள் சம்பந்தமான விடயங்களில் பத்திரிகைகளின் தீர்ப்பே இறுதியானதாகக் கருதப்படல் வேண்டும். தேசியபத்திரிகைகளின் தனித்துவமும் மக்களின் மத்தியில் விரைவில் செய்தியை பரப்பும் தகுதியும் பலம் வாய்ந்த தேசியபத்திரிகைகளுக்குத்தான் உண்டு என்பதை நாம் உணரவேண்டும். பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் செய்தியை முதலில் பிரசுரிப்பதே அவர்களின் கடமை.

பத்திரிகைகளும் நிருபர்களும் தங்கள் வேலை அமைப்பின் காரணமாக சிரேஷ்ட அதிகாரிகள் பத்திரிகைக்கு செய்திகளை கொடுக்கலாமென அதிகாரம் வழங்கும் வரை காத்திருக்க முடியாது. இதன் காரணமாக பத்திரிகைகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்குமிடையில் விரிசல்கள் ஏற்படுகின்றன.

உயர்அதிகாரிகள் உங்களை தண்டிக்கக் கூடும் என்ற காரணத்திற்காக பத்திரிகையாளர்களை செய்திகளை பிரசுரிக்காது விடும்படி கேட்பது உகந்த முறையாகாது. உத்தியோகத்தர்களுக்கும் வாசகர்களுக்குமிடையில் பத்திரிகைகள் நின்று தமது கடமையை செய்வது இயற்கையே.

'இரகசியம்' என்[...] புடன் கோவைகளை [...] மாரிகளில் பூட்டி[...] தால் நிருபர்களின் [...] களை தீர்த்து விடமு[...] அரசாங்க அதிபர்க[ள்] நிருபர்களுக்குமி[டையில்] நெருங்கிய சந்திப்[பு] ஏற்படுத்தப்படல் [வேண்]டும்.

நிருபர்களுக்கு [...] யன என்ன என்று [...] அதற்கு தகுந்த மு[...] பரிகாரம் தேடப்[பட] வேண்டும். நாங்கள் [...]ளுக்கு வேண்டியன[...] கொடுத்துதவ வே[ண்டும்] அல்லாவிட்டால் அ[...] எவ்வழியாலும் செ[...] எடுத்துவிடுவார்கள். [...] தத்துவத்தை நாம் [...] வேண்டும்.

பத்திரிகையாளர்க[...] கள் எங்கிருந்து செ[...] பெற்ருர்கள் எ[...] பிறர்க்கு தெரிவிப்[...] என்ற உண்மைக[...] கையை நிலைநாட்டி[...]ருர்கள். அதனை ஏற்[...] அவர்களை மதிக்[க] வேண்டும்.

மாகாணங்களி[...] நிருபர்கள் உயர்ந்த [...]லுள்ள கனவா[...] போன்று கணிக்[...] அவர்கள் எல்லா அ[...] அதிபர் காரியால[...]லும்வரவேற்கப்பட[வேண்]டும். இதன் கார[...] உண்மையற்ற ஆதா[...] செய்திகளை பத்திரி[...] இடம்பெருமல் செய்[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — தமிழ் வேண்டும்

சிங்கம் —

...டியாக நிறுவித்தர
...டுமென்ற தோரிக்
...ய ஆணித்தரமாக
...றுத்தி தமிழ் இனத்
...விமோசனத்திற்கு அடி
...டயான இந்நிறுவ
...த குவதற்
...செயலாற்ற முன்வரு
...வண்டும்

## ...ாணவருக்கு ...பாணில்லை

சுழிபுரம், திங்கள்
...புரம், தொல்புரம்
...ய் கிராம முன்னேற்
...மாஜ கூட்டுறவு பாண்
...ணையால் பாண்பெற
...கொள்ளும் அனேக பாட
...களுக்கு பாண் கிடைக்
... இருப்பதால் மாண
...ர் பட்டினியுடன் வீடு
...லநேரிட்டதாகத் தெரி
... பாண் தயாரிப்பதற்கு
...ாங்கம்மாவை விநியோ
...ததால்பாண்கொடுக்க
...வில்லை என அறிவிக்
...ட்டுள்ளது. பாண்
...க்கப்படவில்லை என
... திருவடிநிலை தமிழ்
...ன் படசாலை தலைமை
... திரு. எ... சிதம்
...ளை வடப... கல்வி
...ருக்கு அறிவித்துள்ள
...தெரிகிறது.

## சைவ மகாநாடு

கைதடி, திங்கள்
...கடி இந்து வாலிபர்
...த்தின் 4-வது சைவ
...டு இம்மாதம் 24-ம்,
... 26ம் திகதிகளில் சங்க
...த்தன மண்டப அரங்
... நடைபெறும். மாநாடு
... மாநாடு, சைவ இலக்
...மாநாடு, சைவ இளை
...மாநாடு, சைவ மங்கை
...மாநாடு எனப் பரந்த
...படையில் நடை
...ம்.

## ...க்கத்தில் ...ணி

## ...காரியதரிசி

# கமிஷனர் நிர்வாகத்தில் யாழ்-நகரின் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகர சபை விசேஷ கமிஷனரின் ஆட்சியின் கீழ் வந்தபின், முன்னைய நிலையிலும் தீவிரமான முன்னேற்றங்களும், பட்டினத்துக்கான வசதிகளும், அதிகரித்துள்ளதென கமிஷனர்களின் ஒருவருட நிர்வாகம் பற்றிய அறிக்கை குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாணம் பெரிய கடையில் கஸ்தூரியார் வீதியை மருவி முன்னிருந்த பஸ் நிலையம் போக்குவரத்துக்கு வசதி குறைவாகவும் 12'X6' பரிமாணமுள்ள தரிப்பிடங்கள் ஆறுள்ளதாகவும் இருந்தது. மேற்படி பஸ் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டு 132' X 14' பிரமாணமுள்ள மூன்று தரிப்பிடங்கள் நவீன வசதிகளும் மின்சார வசதியும் உடையனவாக அமைக்கப்பட்டுள்ளனது. முன்னர் தூரத்து ஊர்களுக்கு செல்வதற்குரிய டிக்கட்டுகளை பஸ் டிப்போக்களிலேயே பெற வேண்டியிருந்தது. தற்போது நிலையத்தில் அவை பெறக்கூடியனவாகவிருப்பதுடன் சீஸன் டிக்கட்டையும் இங்கு அளிக்கவசதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணமார்க்கட்டை திருத்தி நவீன வசதிகளுடன் அமைப்பதென ஏற்கெனவே மாநகரசபை ஆட்சியினர் முடிவுசெய்திருந்தனர். ஆண்டுகள் சிலகடந்தும் அப்பிரச்னை முடிவுக்குவராத நிலையில் கமிஷனர்கள் சபையைக் கையேற்றனர். ஒப்பந்தகாரர்களின் பிரச்னை தீர்த்துவைக்கப்பட்டு புதிய சந்தையை நவீன வசதிகளுடன் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம் பொதுஜன நூல் நிலையக் கட்டடம் 1958-ம் ஆண்டு தொடக்கம் முதலாவது நிலை கூடப் பூர்த்தியாக்கப்படாத நிலையில் இருந்தது. கமிஷனர் ஆட்சியின்பின் முதலாவது நிலைசெப்பமாக்கப்பட்டதோடு இரண்டாவது நிலையும் பூர்த்தியாகும் நிலைக்கமைந்துவிட்டது. அதன் மேலமைக்கப்படவுள்ள விமானம் 45 அடியுயரமுள்ளதாகவும் சிற்பக்கலை வல்லுனர் நரசிம்மன் திட்டத்துக்கேற்பவும் பூர்த்தியாக்கப்படுகிறது.

புல்லுக்குளத்தை மருவி, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கும் கோட்டை முனீஸ்வரன் கோவிலுக்கும் இணைப்பமைக்கக் கூடிய முனீஸ்வரன் வீதி புதிதாகத்திறக்கப்பட்டுள்ளது. இவ்வீதியினால் யாழ்ப்பாண மார்க்கட் விரிவடையக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தரை நவீனமுறையில் படிக்கட்டுக்கள் அமைத்துள்ளமை நிகழ்ச்சிகளை ஒரே சமயத்தில் பலரும் சிரமமின்றி பார்க்கக்கூடியதாகவுள்ளது.

திருநெல்வேலி சிவன் கோவில்—அரசடி வீதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா புதிய அமைப்புடன விஸ்தரிக்கப்பட்டதுடன், வாகனப் போக்குவரத்துக்குத் தக்க சில வீதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

...ந்தகாலத்தில் துண்டு விழும் வரவு - செலவு திட்டமே அதிமாகக்காணப்பட்டுவந்தது. கமிஷனர் ஆட்சியின் பின் பழைய நிலுவைகளை அறவிட்டதன் பேரிலும், புதிய வருமானத்தினாலும் 8 இலட்சம் ரூபாய்கிடைத்துள்ளது.

யாழ்ப்பாண பொதுஜன நூலநிலையத்துக்கு வழமையாக 10 ஆயிரம் ரூபாவுக்கே நூல்கள் பெறப்பட்டுவந்தன. தற்போது 25 ஆயிரம் ரூபாவுக்கு நூல்கள் அளிக்கப்பட்டதுடன் மாணவர்களின் விஞ்ஞான அறிவுக்குகந்த நூல்கள் புதியதாக எடுக்கப்பட்டுள்ளன.

ஆசிய பவுண்டேஷன் 9 ஆயிரம் ரூபா மாணவர்கள் நூல்களுக்கென வழங்கியுள்ளது.

மின்சாரப் பகுதியினர் கனகரத்தினம் வீதி, பரமேஸ்வராக்கல்லூரி ஆகியவற்றை புதிதாக அமைத்ததன் காரணமாக அதனை அடுத்துள்ள பிராந்தியத்துக்கு மின் வெளிச்சம் ஒழுங்காகவும் பிரகாசமாகவும்கிடைக்கும் வசதி யேற்படுத்தியுள்ளனர். நாவலர்வீதி, புங்கங்குளம் வீதி, பிறவுண் வீதி ஆகியவற்றிலுள்ள மின்னிலையங்களின் சக்தி 1லிருந்து 3-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை மின்சாரக் கம்பங்கள் டெண்டர்கள் மூலம் பெற்றுவரப்பட்டன. அதனைப் புதிதாக தாமே செய்வதன் மூலம் ஒரு கம்பத்துக்கு50 ரூபா மிச்சமாகின்றது. இப்படியாக தற்போதைய தேவைக்கு 800 கம்பங்கள் பெறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் அமைந்துள்ள ஆயுள்வேத வைத்திய நிலையம் புதிய வைத்தியரின் சேவையினால் உயர்ந்துள்ளது. 150 நோயாளிகளுக்கு மேல் அங்கு தினசரி வந்து வைத்திய உதவி பெறுகின்றனர். 10 ஆயிரம் ரூபாவை கவுன்சில் அளிப்பதுடன் மேற்கொண்டு 10 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் உதவியாகக் கொடுப்பதனால் அந்த ஆலயத்திரி ... படக் கூடும்.

மேற்கூறியவை ... தும் இதுவரை ... முடிந்த காரியங்களாகும்.

புல்லுக்குளத்துக்கரையில் சுவர் கட்டி விஸ்தரித்து அதனகத்தே மின்சார வெளிச்சம் பொருத்தி ஆசனங்களும் அமைத்து மாலையில் மக்களுக்கு ஆறுதல்... ம் நிலையமாக்கவும், இறந்தவெளியரங்க... ...ப் புறத்தில் ஆட்... ...க் செல்லக் கூடி... ...வசதியமைந்த கட்டடத்தை அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர். இதற்காக கவுன்சில் 20 ஆயிரம் ரூபாவும், அரசாங்கம் 10 ஆயிரம் ரூபாவும் வழங்கவிருக்கிறது.

கமிஷனர் ஆட்சியின் போது திருத்தஞ் செய்யப்பட்ட வீதிகள், ஒழுங்கைகள், வடிகால்கள் அனைத்தும் தனி நபர்களின் திருப்திக்கப்பாற்பட்ட பரவலான நோக்குடனும், பொது மக்களின் சௌகரியத்தை அனுசரித்துமே செய்யப்பட்டன.

இதுவரை கமிஷனரின் சேவையைச் சிலாகித்து மக்களிடமிருந்து பாராட்டுகள் கிடைத்திருப்பதாகவும், அவர்களின் பிரச்சினைகள் அவ்வப்போது தீர்த்துவைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. [நி]

# உருளைக்கிழங்கு உற்பத்திக்கு கடன் உதவி

யாழ்ப்பாணம்' செவ்வாய்

**வட பகுதியில் செய்கைபண்ணப்படும் உப உணவுப் பயிர்ச் செய்கைகளில் இலாபத்தைத் தரக்கூடிய உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு 2 பரப்புக்கு 175 ரூபா கடன் உதவி அளிக்கப்பட இருப்பதாக யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் நமது நிருபரிடம் கூறினர்.**

அவர்மேலும்தெரிவித்ததாவது: புதிதாக உருளைக்கிழங்குப்பயிர்செய்கையிலீடுபடவிருக்கும் விவசாயிகள் உட்பட சகல உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கும் வழங்கப்படவிருக்கும் இக்கடன் தொகையை பயிர்ச் செய்கையாளர்கள் தமக்குச் சமீபத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தமது கடன் மனுப்பத்திரங்களை அக்டோபர் 15ம் திகதிக்கு முன்னதாக அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கடனைப் பெறவிரும்பும் ஒரு விவசாயியின் கடன் மனுப்பத்திரம் காணி ஓவசியர்களினால் சிபார்சு செய்யப்பட்டு கூட்டுறவுப் பரிசோதகர்களினால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

6 மாதங்களில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய இக்குறுகியகாலக் கடன்களைச் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டும். இக்கடன் தொகையைக் குறிப்பிட்டகால எல்லைக்குள் திருப்திகரமாகத் திருப்பிக் கொடுக்கும் விவசாயிகளுக்கு இக்கடன்தொகை படிப்படியாக 5 ஏக்கர் வரையும் கூட்டிக் கொடுக்கப்படும்.

உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய உரம், பசளை, விதைக் கிழங்கு, கூலி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே இந்தக் கடன் உதவி வழங்கப்படுகிறது. இக்கடன் உதவியை பெறுவதற்கு... தற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் துரிதமாக முடித்து நவம்பர் முதல் வாரத்துக்குள் வங்கியிலிருந்து இக்கடன்களைப் பெற்றுக் கொடுக்கவேண்டுமென சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. வடபகுதியில் எதிர்காலத்தில் கால் ஏக்கர் நிலத்தில் 3 மாத காலத்தில் சுமார் 1000 ரூபாவுக்கு மேல் இலாபம் பெறக்கூடிய உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கென நவம்பர் 15ல் 8,500 அந்தர் விதைக் கிழங்கு வந்து சேரவுள்ளது. விளைவிக்கப்பட்ட உருளைக்கிழங்கை வாங்கி விற்பனைசெய்வதற்கு வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சமாஜம் ஏற்ற ஒழுங்குகளை செய்துள்ளது.

இக்கடன்களைப் பெறுவது சம்பந்தமாகவும், உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை சம்பந்தமாகவும் விளக்கங்கள்கொடுப்பதற்கு திரு. ஜே. எம். சபாரத்தினம் அவ்வப்பகுதிகளில் இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட பல கூட்டங்களை வைக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளார், (விநி)

நாம் வழிவகுக்க முடியும். உணவு உற்பத்தி சம்பந்தமாக பத்திரிகை நிருபர்களுக்கு தகுந்த இடம் வழங்கப்படல்வேண்டுமென்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

தற்பொழுது நிலவிவரும் பல கஷ்டங்களுக்கிடையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உணவு உற்பத்தி இயக்கத்திற்கு பத்திரிகைகள் பல வழியாலும் முக்கியத்துவம் கொடுப்பதுடன் நில்லாது பத்திரிகையின் பெரும்பகுதியை ஒதுக்கி ஆதரவளித்து வருகின்றதென்பதை நாம் மறந்துவிடலாகாது.

## விவசாயிகள் கவலை

காங்கேசன்துறை. திங்.

காங்கேசன்துறையிலிருந்து ரயில் மூலமாக கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக இந்த ... ஒரு... டு ... வெங்காயம் ஏற் ... செய்யப்படுவதற்கு ... பல வழிகளிலும் சிதைந்துபோவதாக விவசாயிகள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

## பயனற்ற மருத்துவமனை

நாரந்தனை, திங்கள்

வேலணை மருத்துவ மனையின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாக பொது மக்கள் பலர் புகார் தெரிவித்துள்ளனர். இந்த மருத்துவமனை இருக்குமிடத்தைச் சுற்றியுள்ள எல்லை வேலிகள் சேதமுற்றநிலையில் கிடக்கின்றன. மருத்துவமனையின் யன்னல்கள் உடைந்து காட்சியளிக்கின்றன. இரவு நேரங்களில் இங்கு தங்குவது மிகவும் அபாயகரமானது என அஞ்சப்படுகிறது. பாதுகாப்பற்று வசதியற்றுக்கிடக்கும் இந்த மருத்துவமனையால் பொதுமக்களுக்குத் தேவையான அளவுசேவை செய்யமுடியாமலிருப்பதாகவும் தெரிகிறது. இது பற்றி இங்குள்ள மக்கள் பெரிதும் அதிருப்திகொண்டுள்ளனர்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

மாதகல் அர்ச். ஜோசைப்பர் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கப் புதிய நிர்வாகிவாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஈ. நவரத்தினசிங்கம், உபதலைவர்கள்: திருவாளர்கள். என். கந்தையா ஜே. பி., நீ. யேம்ஸ், ஏ, எக்ஸ். தேவதாசன், என். பீற்றர், இணைச்செயலாளர்: திரு. சி. நடராசா, திரு. பி. ஜோசப், தனாதிகாரி: என். பி. ஜோசப். நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## எங்கள் பஸ்சேவை

சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் நல்ல தரமான சேவையைசெய்து வந்த வடபிரதேச இலங்கை போக்குவரத்துச் சபையினர் 'பழையபடி.....' என்ற பழமொழிக்கிணங்க தமது சேவையில்வேண்டாவெறுப்புத்தனம் காட்டுவது மிக வருத்தம் தருவதாக இருக்கிறது.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் எந்த பஸ்ஸைப் பிடிக்க எங்கே நிற்பதுஎன்று பொது மக்கள் தட்டுத்தடுமாறிக் கொண்டு நிற்க, குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லும் பஸ்ஸுக்காகக் காத்துநிற்கும் 'அப்பாவி' மக்கள் ஓரிடத்தில் நிற்க பஸ் தன் இஷ்டப்படி வேறொரு இடத்தில் நிற்பதும் பலமணி நேரமாக கால்கடுக்க நிற்கும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு உள்ளே ஏற முஸ்தீவு செய்யும்போது 'ஒருத்தரும் இங்கே ஏறக்கூடாது' என கண்டக்டர் கத்துவதும் இப்போ இ. போ. ச.வில் சர்வ சகஜமாகிவிட்டது. இந்தக் குரல் இ. போ. ச. முகாமையாளர்களுக்குக் கேட்கும் என்றே நம்புகின்றேன். மரியாதை வாரம் வந்து பல மாதகாலமாகிவிட்டதால் கண்டக்டர்கள்போன்ற பஸ் ஊழியர்கள் பொதுமக்களுடன் மரியாதையாய் நடந்து கொள்ளவேண்டும்என்பதை மறந்திருக்க நியாயமுண்டு. இதற்காக அவர்கள் மீது குறைசொல்லவும் முடியாதுதான்.

பஸ் சேவையைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு மரியாதை பற்றி எழுதுவது பொருத்தமில்லாவிடினும் போக்குவரத்துச் சேவையின்போது இதையும் கவனிக்கும்படி அமைச்சர்கள் கூறிவருவதால் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியம்போல்தோன்றியது.

மக்களுக்காகத்தான் பஸ் சேவை என்ற நிலைமாறி பஸ்ஸுக்காகத்தான் மக்கள் என்ற புதிய நிலையும் இப்போது தோன்றியுள்ளது பற்றிசம்பந்தப்பட்டவர்கள் அறிவார்களோ என்னவோ? அதாவது பஸ் இருந்தால் மக்கள் போகட்டும் இல்லாவிடில் அவர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்ற வேண்டாவெறுப்பான கொள்கை இப்போது 'மெல்லீசாகப்' பரவிவருகிறதா என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. 'பஸ் எப்போது வரும்' என்று ஒரு சாதாரண பிரயாணி கேட்டால் 'போய் கியூவில் நில்லும்' என்ற பதில் அளிக்கும் அளவுக்கு இ. போ. ச. ஊழியர்களுக்கு கோபம் வந்து போகும் அளவுக்கு யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை இயங்கிவருவது குறித்து சுட்டிக்காட்டாவிட்டால் தரமான பஸ்சேவை நடைபெறுகிறது என்று இது பற்றி தெரியாமல் அல்லது நிலைமை மறைக்கப்பட்டிருக்கும் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்கள் அறியாமல் இருக்கவேண்டிநேரிடுமே என்பதால்தான் இங்கு குறிப்பிடவேண்டி வந்தது.

குறிப்பிட்ட அளவு சனம் சேர்ந்த பின்தான் ஓடுவது என்ற தனிப்பட்ட வான்காரர்களின் கொள்கையை பஸ்களும் கடைப்பிடிக்கிறதா என்ற சந்தேகமும் இப்போது எழுகிறது.

யாழ். பஸ்நிலையத்தில் இப்போது நெருக்கி அடித்துக்கொண்டு குளறும் குழந்தைகள், நடக்கமுடியாது சோர்ந்து அலுப்புடன் உட்கார்ந்திருக்கும் நோயாளிகள், வயோதிபர்கள், இவர்களெல்லாம் பஸ் சேவை இங்கு எப்படி இயங்கிறது என்பதற்கு நல்ல சாட்சிகள்.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தில் பிரயாணிகள் ஏறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் ஷெட்டுகள் ஒழுக்கவீனங்களுக்கும்திருட

[10-ம் கலம் பார்க்க]

(11-ம் கலத் தொடர்ச்சி)

டுக்களுக்கும் நல்ல வாய்ப்பளிக்கிறது. இரவில் இங்கு அவலப்படும் பிரயாணிகள் அனுபவித்துவரும் கஷ்டங்களில் இதுவுமொன்று.

இங்கு பஸ்கள் போதாதா? நிர்வாகம் சரியில்லையா? அல்லது மக்களுடன் கண்ணியமாக,மரியாதையாக நடந்து கொள்ளும் ஊழியர்களுக்கு இ. போ. ச.வில் இப்போது பஞ்சம் ஏற்பட்டுள்ளதா? கொஞ்சம் கருணையோடு இதை பரிசீலனை செய்யுங்கள்!

—குருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பிறரை அடிமைகளாக்கிக்கொண்டு எப்படி உரிமை கோரலாம்'?

### உள்ளூராட்சி அமைச்சர் கேட்கிறார்

யாழ்ப்பாணம், செவ்

''தமிழ் மக்களாகிய நாம் எம் சமூகத்தவர்களில் ஒரு பகுதியினரை அடிமைகளாக்கிக்கொண்டு நமக்கு உரிமை தரும்படி அரசாங்கத்திடம் கோருவது நியாயமாகுமா?''

புத்தூர் குருநாதர் நெசவு நிலைய கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ''தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒன்று ஒற்றுமையாக வாழ முற்படுகிறார்களோ அன்றே அவர்கள் சமூக பொருளாதார அரசியல் துறைகளில்பூரண சுதந்திரம் பெற்றவர்களாவார்கள்'' என்றார்.

யாழ். அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா பேசுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிசைக் கைத்தொழில் இலாகாவின் உதவியுடன் நிறுவப்பட்ட நெசவு நிலையங்களில் சிறந்த கட்டிடமாக வாலிபர்களின் அயராத சிரமதான ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டுள்ள இக்கட்டிடம் வறுமைப்பட்ட மக்கள் வாழும் இப்பகுதி மக்களுடைய ஜீவனோபாயத்துக்கு பல வகையிலும் பேருதவியாக எதிர்காலத்திலிருக்கும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து நிலையத்தின் சேவைக்கு ஆதரவு நல்கும்படியும், அதனால் நாட்டில் உடைப் பஞ்சம், உணவுப் பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம் என்பன ஒழியும் என்றும் குறிப்பிட்டார்.

கோப்பாய் காரியாதிகாரி கந்தப்பிள்ளை பேசுகையில் சமுதாய முன்னேற்றத்திற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும், சமூகப்பணி புரிவதற்கும்வாலிபர்கள்தங்கள் காலத்தைச் செலவிட முன் வந்தால் அது நாட்டில் உள்ள பல பிரச்னைகளைத் தீர்க்க வழியாகும் என்றும் இந்நோக்கத்தைச் செயல்படுத்த நிதி குறைந்த மக்கள் நிறுவுவதற்கு கட்டிட காரியதரிசி ஆறுமுகம் தலைமையில் புத்தூர் சங்க இயக்கம் காட்டிய வழி ஏனைய சங்கங்களுக்கும் முன்மாதிரியாக இருக்குமென்றும் கூறினார். [நி]

## பழுதான பாதை

யாழ்ப்பாணம், செவ்

அல்லைப்பிட்டி கிராமசபை பரிபாலனத்துக்குட்பட்டதும் அல்லைப்பிட்டிக்கிராமத்தை மேற்குக் கிழக்காகப் பிரிப்பதுமான வீதி கடந்த பலவருடங்களாக பழுதுற்ற நிலையிலுள்ளது.

அல்லைப்பிட்டிக் கிராம சபை அல்லைப்பிட்டிப் பிராந்தியத்திலிருந்து மண்ணேற்றிச் செல்லும் வாகனங்களிடம் அறவிடப்படும் மாத வருமானம் 1000 ரூபாவுக்குக் குறையாது கிடைக்கிறது. அந்தப் பணத்தைக்கொண்டு இருப்பிடிகரமாக வீதிகளைப் புனருத்தாரணம் செய்யக் கூடியதாகவிருந்தும் கிராமசபை இதுபற்றிய நடவடிக்கைகளை இன்று வரை மேற்கொள்ளாதது குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருகிறது. [நி]

## மூட்டைத்தொல்லை நோயாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் உள்ள நோயாளிகள் மூட்டைப்பூச்சியின் தொல்லை தாங்காமல்மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

சில நோயாளிகள் மூட்டைப்பூச்சிக்கடியினால், இரவில் நித்திரை கொள்வதில்லையென்றும், சில வார்ட்டுகளில், நோயாளிகள் தொடர்ந்து நிலத்தில் படுத்து வருவதாகவும்கூறப்படுகிறது.

## 'மூடப்பழக்கங்களுக்கு முழுக்குப்போடுங்கள்'

### வட்டுக்கோட்டை எம். பி. கூறுகிறார்

சுழிபுரம், ஞாயிறு

''எமது இளைஞர் அறிவைப் பெற்றவர்களாக விளங்கவேண்டும். பாரதி எப்படியான புரட்சியைக் கொண்டிருந்தார் என்பதை அவரது ஒவ்வொரு கவிதைகள் மூலமும் கண்டுகொள்ளலாம். பாரதி கண்ட தமிழ் சமுதாயத்தைப் பற்றிய கனவை நனவாக்குவதில் எமது இளைஞர்கள் முன்வர வேண்டும்.''

மேற்கண்டவாறு வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தினர் கொண்டாடிய பாரதி விழாவில் கலந்துகொண்டு பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். விழாவுக்கு வைத்திய கலாநிதி த. சிவசுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், 'பாரதியின் கவிதைகள் பொழுதுபோக்குக்காக பாடப்பெற்றவையல்ல அவை பாரத மக்களின் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட பொக்கிஷங்கள். இந்த இருபதாம் நூற்றண்டில் சந்திரமண்டலம் செல்லவும், இமயத்தின் உச்சியில் கொடிகள் நாட்டவும் மனிதன் வெற்றியடைந்துள்ளான் என பெருமை கொள்ளும் அதே வேளையில் யாழ்ப்பாணத்தவர்கள் எத்தனையோ பேர் பேய், பிசாசு, சூனியம், என்ற மூடப்பழக்கங்களில் காலத்தைப்போக்கிசாகின்றார்கள், அல்லல்படுகின்றார்கள். இந் நிலை மாறவேண்டும்'' என்றார்.

திரு. கே. அரிச்சந்திரா, பண்டிதர் எஸ். வேலுப்பிள்ளை, திரு. எஸ். பரமராசா, செல்வி பொ. மகேஸ்வரி, எஸ். நாராயணன் ஆகியோரும் பேசினர்.

## அரைமாதச் சம்பளம் வழங்கினர்

யாழ்ப்பாணம், செவ்

ஜோமகேஸ்வரன் வழக்கு பிரிவுக்கவுன்ஸில்வரை சென்று வாதாடுவதற்காக அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ்ப்பாணக்கிளையினர் தமது அரைமாதச் சம்பளத்தை வழங்கியுள்ளனர். கொழும்புக்கிளையினர் தமது இம்மாதச் சம்பளத்திலிருந்து அரைவாசிப் பணத்தை நன்கொடையாக வழங்குவதாக ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

இது சம்பந்தமாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் இச்சட்ட நடவடிக்கைக்கு ரூ. 75,000 செலவாகுமென்றும், இதற்கு சகல அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களையும் அரைமாதச் சம்பளத்தைத் தந்துதவுமாறும், அரசாங்க இலாக்காக்களையும், கூட்டுத் தாபனங்களையும், வர்த்தக நிலையங்களையும் சேர்ந்த ஊழியர்களையும் நிதியுதவி புரியுமாறும் வேண்டியுள்ளனர். [ந. நி.]

## அஞ்சல் எழுது வினைஞர் சங்கக்கோரிக்கை

வெள்ளவத்தை, திங்கள்

தபாற் தந்தி இலாகா தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறைகாலப் புகையிரத ஆணைச் சீட்டுக்களைத் தமிழில் வழங்கும்படி கோரித் தபால்மா அதிகாரி திரு. ஏ. எல். பெரேராவுக்கு அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் சார்பில் செயலாளர் திரு. வெ. குமாரகுரு கடிதமனுப்பி வைத்துள்ளார். இப்போது மேற்படி ஆணைச் சீட்டுகள் தனிச்சிங்களத்திலேயே வழங்கப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத் திலுள்ள பிரதேச பொறியிலாளர் அலுவலகத்திற்கு இனிமேல் இடமாற்றம் செய்யப்படும் ஊழியர்கள் சிங்களமொழித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற தபாற்கந்தோர்ச் சுற்றறிக்கையின் நிபந்தனையையும் அஞ்சல் எழுதுவினைஞர்சங்கம் கண்டித்துள்ளது. இது பற்றியும் பிரதம தபாலருபருக்கும் புகார் செய்யப்பட்டு மேற்படி சிங்கள நிபந்தனையை நீக்கி விடும்படிகோரப்பட்டுள்ளது.

## ரயில் சேவை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்தேவி- உத்தரதேவி கொழும்பு, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குப் போய்ச் சேருவதில்லையெனவும், இதன் காரணமாக பிரயாணிகள் கஷ்டமடைந்து வருவதாகவும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் போக்குவரத்து அமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்கு இனிமேல் புகைவண்டிகள் உரிய நேரத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குப் போய்ச்சேரும் என மந்திரி திரு. இரத்தினத்திற்கு அறிவித்துள்ளார்.

## அராலியில் பெற்றோல் ஆராய்ச்சி

அராலி, திங்.

கல்லுண்டாய் உப்பளத்தையடுத்துள்ள நிலப்பரப்பினுள் பெற்றோல் எண்ணெய் ஆராய்ச்சி இப்போது நடந்து வருகிறது. அராலி வடக்கு குடியிருப்புப் பகுதிகளில் வீட்டோரங்களிலும் குழிகள் தோண்டப்பட்டு ''டைனமைட்'' வெடிகள் தீர்க்கப்பட்டு புகைப்படங்கள் பிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சியை பிரெஞ்சு நிபுணர்கள் மேற்கொண்டுள்ளனர்.

## சமய தீட்சை

அராலி, திங்.

அராலி தெற்கு செம்பிதோட்ட வைரவராலய பிரார்த்தனைச் சபை உறுப்பினர் 26 பேர் நேற்றைய தினம் தமது புரோகிதக்குரு ஸ்ரீலஸ்ரீ வேதாரணியக்குருக்களிடம் சமய தீட்சை பெற்றனர். இதற்கான முயற்சியை மேற்படி சபைத்தலைவர் திரு. வீ. கணேசன் மேற்கொண்டிருந்தார்.

## வெள்ளிப் பதக்கம் பெற்றார்

வெள்ளவத்தை, திங்.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு இலாகா தமிழ் இலக்கிய மன்றத்தினர் நடத்திய பாரதி விழா கட்டுரைப் போட்டியில் நெல்லியடியைச் சேர்ந்த செல்வன் க. பேரம்பலம் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றார்.

## கல்லுண்டாய் உப்பு

சுழிபுரம், திங்கள்

கல்லுண்டாய் உப்பளத்தில் இக்காலபோகத்துக்கான உப்பு அள்ளும்வேலைகள் மிகவும் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் உப்பு அள்ளும்வேலையில் ஈடுபட்டுள்ளனர். உப்பு விளைச்சல் சென்ற பருவத்திலும்பார்க்க அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நூல் நிலையம்

வல்வெட்டித்துறை, திங்.

வல்வை நெடியகாட்டில் 10,000 ரூபா செலவில் அமைக்கப்பட்ட நூல்நிலையத்தை கடந்த வாரம் வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. எம்.வி. இரத்தினவடிவேலு திறந்துவைத்தார். இவ்வைபவத்திற்கு திரு. என். செல்லமாணிக்கம் தலைமை வகித்தார்.

## கருத்துரையாடல்

வவுனியா, திங்கள்

இம்மாதம் 24,25-ம்திகதியில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் தமிழ்இலக்கியம், தமிழ்மொழி ஆகியவற்றிலான கருத்துரையாடல் நடைபெறவிருக்கிறது. கனிஷ்ட பொதுத் தராதரப்பத்திர மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் நடைபெற விருக்கும் இந்தக் கருத்துரையாடலில் வெளியிடங்களிலிருந்தும் பேராசிரியர்கள், பட்டதாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்


நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
K.R. ராமசாமி - பத்மினி
நடித்த
சொர்க்க வாசல்

மனோஹரா [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 6-30 9-45
போயாதினங்களில்3 காட்சி
கம்ருன் - கிருஷ்ணகுமாரி
நடித்த
ஸ்டேட் எக்ஸ்பிறெஸ் [ஹிந்தி]

3-வது வெற்றி வாரம்!
கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னு, மாதவி
நடித்த



நாம் மூவர்
டைரக்ஷன்: ஜம்பு
பாடல்கள்: வாலி
இசை: என்.எம்.எஸ்.
கடைசி சிலதினங்கள் கிங்ஸ்லி [கொழும்பு]
மற்றும் 5 திரைகளில்
சரோஜாதேவி நடித்த
அன்பே வா

REGAL JAFFNA
Daily 4-30 7-00 p. m.
9-45 p. m.
Peter Cushing &
Peterwood thrope
in
The Evil of Frankenstein

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4 காட்சி
காந்தராவ் — வசந்தி
நடித்த
விரபாண்டியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வார்ணிஷ் குடித்து இறந்தவர் பிரேதமும் பரிசோதனையில் இடம்பெற்றதா?

—வழக்கறிஞர்.

## ராயப்பேட்டை ஆஸ்பத்திரி டாக்டர் மீண்டும் விசாரணை

சென்னை, செப். 18

**எம். ஜி. ஆர். - எம். ஆர். ராதா வழக்கு சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி திரு பி. லஷ்மணன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த சென்னை வைத்தியக் கல்லூரி சட்ட வைத்தியத்துறைப் பேராசிரியர் டாக்டர் சி. பி. கோபாலகிருஷ்ணன் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போது உபயோகிக்கப்பட்ட ரிவால்வர் தோட்டாக்கள் பற்றி பரிசோதனை செய்து நிரூபிக்கும் பொறுப்பு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இதனைத்தொடர்ந்து 7-2-67-ம் திகதியன்று பிணங்களின் மீது சோதனை நடத்திப் பார்த்ததாகத்தெரிவித்தார். தாம் இவ்விதம் மூன்று பிரேதங்களின் மீது சுட்டு சோதனை நடத்தியதாகவும் அவர் கூறினர்.**

ராதாவின் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. என். நடராஜன் குறுக்கு விசாரணை செய்தபோதே டாக்டர் கோபாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் கோபாலகிருஷ்ணன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் மொத்தம் 6 பரிசோதனைத் தோட்டாக்களை மண்டை ஓட்டின் மீது சுட்டுப் பரிசோதித்தேன். ஒன்று தொண்டைப்பகுதியில் சுட்டுப் பரிசோதனை செய்தேன். அது பரிசோதனைக்காகக் கொண்டுவரப்பட்ட தோட்டாவாகும். மண்டைஓட்டின்மீது மற்றும் இரண்டு தோட்டாக்களைக் கொண்டு சுட்டேன். அவைகள் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட தோட்டாக்கள். ஆக மொத்தம் பரிசோதனைக்காக சுடப்பட்ட 9 பரிசோதனைகளில்இரண்டு தோட்டாக்கள் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ரிவால்வரின் தோட்டாக்களாகும். தோட்டாவின் சக்தி அதன் 'பவுடரை'ப் பொறுத்திருக்கிறது

குண்டடிபட்ட பிறகு 250 அடி தூரம்வரை அடிபட்ட நபர் நடக்க முடியும்.

மேலும்பிரேதங்களின்மீது பரிசோதனை செய்யத்தாம் விரும்பியதாகவும் பிரேதம் கிடைக்கவில்லையெனவும் டாக்டர் கோபாலகிருஷ்ணன் கூறியபோது பரிசோதனைக்கான பிரேதம் எப்படிக்கிடைத்தது. வார்ணிஷ் குடித்து இறந்தவரின் பிரேதமா? என வழக்கறிஞர் ஒருகட்டத்தில் கேட்டார்.

ராயப்பேட்டை ஆஸ்பத்திரியின் டாக்டரை மீண்டும் விசாரணை செய்ய விரும்புகின்றோம். ஆகையால் அவரைக் கோர்டடில் ஆஜராகுமாறு உத்தரவிட வேண்டுமென ராதா தரப்பு வழக்கறிஞர் வானமாமலை நீதிபதியிடம் சமர்ப்பித்த மனுவை நீதிபதி ஏற்று அவ்வாறு உத்தரவிட்டார்.

மேற்படி டாக்டர் விசுவலிங்கம் என்பவரே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடந்த அன்று மாலை 6 மணியிலிருந்து இரவு 9-30 மணி வரை எம். ஜி. ஆர். —எம். ஆர். ராதா ஆகிய இருவரையும் முதன்முதலில் கவனித்து சிகிச்சை அளித்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

த. அ. கட்சி

### பட்டினசபை வேட்பாளர்

யாழ்ப்பாணம், செவ்

இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்ட சபையின் தேர்தல் தேர்வுக் குழு கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்தில் கிளிநொச்சிப் பட்டினசபைக்குத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்திருந்தவர்களின் விண்ணப்பங்களை பரிசிலனை செய்தது. பின்னர் பின்வருவோர் தமிழரசு வேட்பாளர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

முதலாம் வட்டாரம்- கனகபுரம் திரு. இ. தருமலிங்கம் இரண்டாம் வட்டாரம்- சந்தை திரு. சு. முருகேசு மூன்றும் வட்டாரம்- கோவில் திரு வ. த. அழகரத்தினம். நான்காம் வட்டாரம் -கணேசபுரம் இ. நடராசா ஐந்காம்வட்டாரம் சி. தங்கராசா, ஆறும் வட்டாரம்— அம்மன் க. ச. கந்தையா, ஏழாம் வட்டாரம்- இரசாயனம் க. நடேசலிங்கம்.

### துணுக்காயில் சிரமதானம்

துணுக்காய், செவ்

யோகபுரம 6-ம் பகுதியைச்சேர்ந்த குடியேற்றவாசிகளால் தங்கள் வீடுகளுக்குச்செல்லும் வீதியைச் சிரமதான மூலம் கிரவல் போட்டு சீர்திருத்தம் செய்துள்ளார்கள். இச் சிரமதானத்தை யபழ்- மாவட்ட காணி அதிகாரி திரு. செ. சிவஞானம் ஆரம்பித்து வைத்தார். காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. சி. சுப்பிரமணியம் சிரமதான இயக்கங்களில் எடுத்து வரும் தீவிர முயற்சிகளையும் பாராட்டினர்.

### கட்டுமரத்துக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, திங்.

பருத்தித்துறை சுங்கப்பகுதிக்கு கிடைத்த இரகசியத் தகவலைத்தொடர்ந்து சுங்க அதிகாரிகளான திரு. மூர்த்தி, திரு. தாமோதரம் பிள்ளை ஆகியோர்கொண்ட கோஷ்டியொன்று வல்வெட்டித்துறைகடல்மூலம்சென்ற போது சந்தேகத்திற்கு இடமாகச்சென்றுகொண்டிருந்த கட்டுமரம் ஒன்றையும் அதிலிருந்த நால்வரையும் கைது செய்தனர். கைதுசெய்தவர்களை விசாரணைசெய்து பின்னர் விடுதலைசெய்தனர். கட்டுமரத்திற்காக அதன் உரிமையாளருக்கு 60 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டது.

உதைபந்தாட்டம்

### யாழ். கல்லூரியை கிறீன்பீல்ட் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் 'கிறின் பீல்ட்' விளையாட்டுக்கழகத்துக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான மேற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் கடைசிவரை கடுமையாகமோதிய 'கிறின் பீல்ட்' கோஷ்டி யாழ்ப்பாணக் கல்லூரியை 2—0 கோல்களால் வெற்றியீட்டியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்பெரும் மோதல் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகவே காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் 'கிறின்பீல்ட்' முன்னணி வீரர்களாகிய போல், தம்பிராசா ஆகியோர்சூட்டோடு சூடாக அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டனர். 'கிறின்பீல்ட்' வீரர்களின் சுறுசுறுப்பான ஆட்டம் எதிர்க்கோஷ்டி வீரர்களை திணறடித்துக்கொண்டிருந்தது.

எனினும் இடைவேளைக்குப் பின்னர் யாழ்ப்பாண கல்லூரி வீரர்கள் புதிய உற்சாகத்துடன் பலமாகமோதினர். எனினும் இவர்களுக்கு பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவற்றைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

'கிறின்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற மற்றுமொரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா 2—2 கோல்கள் பெற்றமையால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில நடைபெற்ற ரசிப்பான போட்டியில் இரு கோஷ்டியுமே ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காமல் ஒரு பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன. [வி. தி.]

## அச்சுத்தொழிலுக்குத்தேவையான அச்சுகள்

### இறக்குமதிக்குஅனுமதியளிககுமாறு அச்சக அதிபர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

அச்சுத்தொழிலுக்கு மூலாதாரமான பலவகை அச்சு எழுத்துக்கள் இலங்கையில் வார்க்கப்படாமையினால், அவற்றைப் பெற்று இலங்கையில் அச்சுத் தொழிலை விருத்திபண்ண முடியாமலிருக்கிறது. இதனால் வெளிநாட்டிலிருந்து தலைப்புப் போடக்கூடிய எழுத்துக்கள், விஞ்ஞான சம்பந்தமான புஸ்தகங்களுக்குப் பயன்தரக்கூடிய எழுத்துக்கள் இடைவெளி நிரப்பிகள் (ஸ்பேஸ்) ஆதியனவற்றைப் பெறக்கூடிய வாய்ப்பை வழங்கும்படி அரசாங்கத்தைக் கோருவதென கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள சண்முகநாதன் அச்சகத்தில் கூடிய வடமாகாண அச்சகத்தார் சங்கம் முடிவு செய்துள்ளது.

அத்துடன் தற்பொழுது அரசாங்கம் நிர்ணயித்துள்ள சம்பளத் திட்டத்தில், மாற்றஞ் செய்து தொழிலாளருக்கு வசதியாக வருடா வருடம் சம்பள உயர்வு கொடுப்பதோடு, காலத்தோடு அச்சக ஊழியருக்கு அரசாங்கம் நிர்ணயித்துள்ளதிலும் கூடுதலான வருவாயைப் பெறக்கூடியதாகவும் சம்பளத் திட்டம் ஒன்றை உருவாக்கி அரசாங்கத்தின் ஆலோசனைக்கு விடுவதென்றும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்துக்கு இவ்வருடத் தலைவராகிய திரு. ச. ச. குமாரசாமி தலைமைதாங்கினர். இச்சங்கம் அச்சக முதலாளிமாருக்கும், ஊழியருக்கும் பரஸ்பரம் ஒத்தாசையாக அமையக்கூடிய முறையில் வெளியிட்டுவரும் "அச்சகன்" என்னும் பத்திரிகையைத் தொடர்ந்து நல்ல முறையில் நடத்தவேண்டியது பற்றியும் இச்சங்கம் ஆராய்ந்தது.

தற்காலிகமாக ஆசீர்வாதம் அச்சகத்து அதிபர் திரு. ஜே. எம். ஆசீர்வாதத்திடம் மேற்படி பொறுப்பு வழங்கப்பட்டது.

தொடர்ந்து இச் சங்கம் ஊழியரிடையேயும், முதலாளிமாரிடையேயும் சௌசன்யத்தை வளர்ப்பதற்கான கருத்தரங்கம் ஒன்றையும் நடத்துவதென முடிவுசெய்தது.

சங்கத்தின் நடப்பு வருடத்துக்குரிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. சி. ச. குமாரசாமி, உப தலைவர் திரு. எம். சபாரட்ணம், காரியதரிசி: திரு. எம். வி. ஆசீர்வாதம், உபகாரியதரிசி, திரு. தி. ச. வரதராசன், தனதிகாரி: திரு ஆ. சுப்பிரமணியம், உறுப்பினர் திருவாளர்கள்: வே. கந்தசாமி, மு. கணபதிப்பிள்ளை, எஸ். பி. சந்திரா, ஏ. பி. அப்பாப்பிள்ளை, வா. சி. மாணிக்கம், சி. நவரத்தினம்.

அடுத்த வாரம் வரையில் பதிப்பாளர் சங்கம் அரசாங்கம் பாட நூல்களைப் பதிப்பிப்பதனால் ஏற்பட்ட நிலையைச் சமாளிக்கக்கூடிய நடவடிக்கைகளைமேற்கொள்வது பற்றி ஆலோசிக்க முடிவுசெய்துள்ளதெனவும் அறியப்படுகிறது. (நி)

### சாரதிக்கு வாரண்ட்

சாவகச்சேரி, செவ்

பளைக்கருகே உள்ள முகமாலை என்ற இடத்தில் நடந்தலொறிவிபத்தில் மாண்ட இளைஞன் வி. பாலச்சந்திர[illegible] சம்பந்தமான [illegible] விசாரணை செய[illegible] சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. விக்னராஜா லொறியை ஓட்டி சென்ற நடராஜா தர்மராசா என்ற நபரைக் கைது செய்யும்படி 'வாறண்ட்' உத்தரவு பிறப்பித்திருந்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில்அதே லொறியில் பிரயாணம் செய்த எம். துரைராசா, எஸ். செந்தில் நாதன் இருவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### நாவலர் விளையாட்டு மைதானம் அபிவிருத்தி

ஊர்காவற்றுறை, திங்.

சரவணை நாவலர் கழகத்தின் விளையாட்டு விழா சரவணை நாவலர் விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. வழக்கறிஞர் திரு. என். சி. சிவஞானம் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் நாவலர் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய அமைச்சிடமிருந்து உதவி பெற்றுத் தருவதாகக் கூறினர். திருமதி சபாரத்தினம் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினர். தீவுப் பகுதிக் காரியாதிகாரியும் இவ்விழாவில் கலந்துகொண்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்பத்திரியிலிருந்த சிறுமி அனுமதியின்றி சென்ருர்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் குழந்தைகள் வார்ட்டில் கடுமையான காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த சுமார் ஐந்து வயதுடைய சிறுமி எவ்வித அனுமதியும் பெருது காய்ச்சலுடன் வீட்டுக்குச் சென்றுவிட்டதாக அறியப்படுகிறது.

சிறுமியைப் பார்ப்பதற்காகப் பெற்ருேர் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டசமயத்தில் சிறுமி மத்தியான வேளையில் வீட்டுக்கு வந்து சேர்ந்தது கண்டு அதிர்ச்சி அடைந்த பெற்ருேர் சிறுமியைக் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாகச் சென்றதாகவும் தம்மிடம் எவ்வித அனுமதியும் பெருது வந்ததற்காக சிறுமியைக் குழந்தைகள் வார்ட்டில் பொறுப்பாக உள்ள ஊழியர்கள் நன்கு ஏசியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் வார்ட்டில் மத்தியானம் மாலை நேர இடைவேளைகளைத் தவிர மற்ற நேரங்களில் பெற்ருேர் எவரும் வார்ட்டினுள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதும் அங்கு பொறுப்பாகவுள்ள தாதிமார்களே வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைக் கவனித்துக்கொள்வது வழக்கமென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி சிறுமி கொட்டடியைச் சேர்ந்தவரென அறியப்படுகிறது.

## 'விவசாயிகளுக்கு கடன் கொடுத்தால் மட்டும் போதாது'

### ப. நோ. கூட்டுறவு சங்க சமாஜ கருத்தரங்கில் கருத்து

சங்கானை, திங்கள்

''கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயத்திற்குக் கடன் கொடுக்கும் அரசாங்கம் முந்திய கடன்களைப் பற்றிப் பேசாது தற்சமயம் விவசாயிகளைக் கடன் எடுங்கள் என்று சொல்லுவதால் எதிர்காலத்தில் கூட்டுறவு இயக்கங்கள் எப்படி ஆகுமோ என்ற பயம் ஏற்படுகிறது.''

இவ்வாறு இளைப்பாறிய கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் திரு. ஆர். சி. எஸ். குக் வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பகுதிக் கருத்தரங்கில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு சமாசத் தலைவர் திரு. கே. கெங்காதரம்பிள்ளை தலைமை தாங்கினார்.

தொடர்ந்து திரு. குக் பேசுகையில், கூட்டுறவு இயக்கமென்பதை வளரும் சிருமிகளுக்கு ஒப்பிடலாம். கூட்டுறவை வளர்க்க நல்ல விருப்பமிருந்தும் இவ்வியக்கத்தைப்பற்றி விரிவாக அறியாது கூட்டுறவை வளர்ப்பதற்குப் பாடுபடுபவர்கள்தான் கூட்டுறவின் பகைவர்களாவார்கள்.

இங்கிலாந்திலே பொருட்கள் நல்ல விலை விற்கும்போது அவைகளை விற்று வரும் ஊதியத்தைச் சேமித்து வைத்திருந்து உலக மார்க்கட்டில் பொருட்கள் விலை குறையும்போது விவசாயிகளைப் பாதிக்காவண்ணம் முந்திய சேமிப்பில் அவ்வப்போது கொடுத்து உதவுகின்ருர்கள். இதனுல்தான் அங்கே கூட்டுறவு சிராக வளர்கின்றது.

நம்நாட்டில் கூட்டுறவு இயக்கம் நன்ருக வளர வேண்டுமானுல்சங்கங்களின் நிர்வாக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்கள் நல்நோக்குடையவர்களாக அமைய வேண்டும். விசேஷ வகுப்புகள் வைத்து கூட்டுறவைப்பற்றி விரிவாக விளங்கப்படுத்தி அதைப் பாமரமக்களிடம் சென்று பிரசாரம் செய்ய வேண்டும். கூட்டுறவு உத்தியோகஸ்தர்களையும் கலந்து ஆலோசித்து அவர்கள் அறிவுரைகளை அவ்வப்போது பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறினுர்.

சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. பொன்னுத்துரை பேசும்போது குறிப்பிட்டதாவது:

இப்பகுதிகளில் கூட்டுறவுச்சங்கங்கள் சாதாரணமாக இயங்குகின்றனவே தவிர நாட்டுக்கு பயன்படத்தக்கவகையில் வேகமாக இயங்காது எமக்குப் பெரிய துரதிர்ஷ்டம். விவசாயத்திற்குக் கடன் கொடுக்கும் அரசாங்கம் விவசாயத்தில் திறமையுள்ள நிபுணர்கள் மூலம் விவசாயிகளுக்கு நவீன முறையில் அபிவிருத்தி செய்ய உதவுவார்களேயானுல் நம்நாடு மற்றைய நாடுகளைப் போல் முன்னேற இடமுண்டு. இலட்சம் இலட்சமாக அரசாங்கம் கடன் கொடுத்தாலும் மேற்படி நிபுணர்கள் இல்லாவிடின் விவசாய விருத்தியை அடைய முடியாது. விவசாயிகளும் கடனை அடைக்க முடியாது கஷ்டமடைவர்.

இளைப்பாறிய பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கே. நேசையா, திரு. ஆர். இராசரத்தினம், கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. பி. குமாரசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். 42 சங்கங்களின் பிரதிநிதிகள் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

## 8000 விவசாயி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இக்கடன் உதவி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வளவு தொகையான கடன் இம்முறைதான் இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதிக உணவுற்பத்தித் திட்டத்தின்கீழ் இத்தொகை இந்த விவசாயிகளுக்குக் கடனுக வழங்கப்பட்டுள்ளது.

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

அளவெட்டி, திங்கள்

அளவெட்டிப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு காரியாதிகாரியால் நன்கொடைப்பணம் வழங்கப்படவிருக்கின்றது.

சனசமூக நிலையங்களின் மேற்பார்வை, அதிகாரங்கள், உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து காரியாதிகாரி பகுதிக்கு மாற்றப்பட்டபின் இப்போதுதான் முதல்முறையாக சனசமூக நிலையங்களுக்கு காரியாதிகாரியால் நன்கொடை வழங்கப்படவிருக்கின்றது.

## விளையாட்டு மூலம் இன, மதபேதம் நீங்கும்

முல்லைத்திவு, திங்கள்

'திடகாத்திரமான உடம்பை வளர்ப்பதற்கு விளையாட்டு அவசியம். இலங்கை சுதந்திரமடைந்து இதுவரை அரசாங்கம் விளையாட்டு துறையில் கவனம் செலுத்தவறியுள்ளதாகவே கூறவேண்டும். ஆனுல் தேசிய அரசாங்கம் பதவிக்குவந்ததும் விளையாட்டுத்துறையை கவனிக்கும்பொருட்டு விளையாட்டுத்துறை அமைச்சு ஒன்றை ஏற்படுத்தியது. விளையாட்டின் மூலம் ஒற்றுமை வளரும். அத்துடன் இனமத பாகுபாடுகளும் ஒழியும். இந்த முல்லைத்தீவுக் கரைதுறை பற்றில் ஓர் விளையாட்டுச்சபையை நான் அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் இதே வேளையில் இச்சபையை பெயரில் மாத்திரம் இயங்கவிடாது செயலில் இறங்கி மற்றைய இடங்களில் நடப்பது போல், முன்னேறவழிவகுக்கும்படி வேண்டுகிறேன்' என முல்லைத்தீவில் கரைதுரைப்பற்று பிரதேச விளையாட்டுச்சபையை அங்குரார்ப்பணம் செய்துவைக்கையில் முல்லைத்தீவுக காரியாதிகாரி திரு. எஸ். கணேசநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

புதியதாக அமைக்கப்பட்ட இச் சபைக்குக் கீழ்க்காணும் உத்தியோகத்தர்களை நடப்பு வருடத்துக்குத் தெரிவுசெய்தனர்.

போஷகர்கள்: வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. சி. பெரரா, முல்லைத்தீவு காரியாதிகாரி திரு. எஸ். கணேசநாதன். தலைவர் வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் திரு, வ. பொன்னம்பலம். காரியதரிசி: திரு. என். தியாகராஜா [விளையாட்டுப்போதனுசிரியர் முல்லைத்தீவு] உதவிக் காரியதரிசி திரு. பி. அந்தோனிப்பிள்ளை. தனுதிகாரி: திரு. ஏ. வி. அருளப்பு ஜே. பீ. பதினைந்து பேரைக் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## கோவிலில் திருட்டு

கோப்பாய், திங்

கோப்பாய் முத்துமாரி அம்மன் கோவிலில் சுவாமியின் கிழுள்ள யந்திரத்தகடு திருட்டுப் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கெய்ரோ, செப். 17

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் தமது பதவியிலிருந்து ராஜிஞமாச் செய்து விட்டாரா?

இப்படியான தொரு பொய்வதந்தி உலாவுவதாகவும் இதுஒரு 'கட்டுக்கதை' யென்றும் கெய்ரோவிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

முன்னுள் ஐக்கிய அரபுக் குடியரசு உதவிப் பிரதமரும், முப்படைகளின் உதவித் தளபதியும், அண்மையில் இஸ்ரேலுக்கு எதிரான போரில் தலைமை தாங்கி நடத்தியவருமாகிய பீல்ட் மார்ஸல் அப்துல் அமீரின் தற்கொலையைத் தொடர்ந்தே திரு. நாஸர் ராஜினுமாச் செய்துள்ளார் எனப் பொய்வதந்தி பரப்பப்பட்டதாகவும், சில அரசியல் எதிரிகளின் சதித்திட்டத்தின் எதிரொலியென்றும் கெய்ரோவிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறைப் பகுதியில் விற்கப்படும் பாணின் நிறை குறைவாக இருப்பதாகவும் சாக்கு நூல்களும் வேறு பாணுக்குத்தேவையற்ற பொருள்களும் காணப்படுவதாகவும் இங்குள்ள மக்கள் பரிசோதகருக்கு புகார் செய்துள்ளனர்.




மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது. இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள்; காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர் மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிருர்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—... அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதியில் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org